## HISTORY OF CHINA AND JAPAN FROM 1894 TO 1970 C.E.

## Subject Code: 18K5H11

### மா சே துங்

**முன்னுரை** :

சீனாவில் கம்யூனிஸ்ட் ஆட்சியின் எழுச்சியும் மா சே துங்கின் மச்சியும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. ஏறத்தாழ அரை பற்றாண்டு காலம் (1927-1976) சீன அரசியலில் செல்வாக்குடன் திகழ்ந்தார். கால சீன வரலாற்றை உருவாக்கி அதனை குறிப்பிட்டதொரு லட்சியப் பாதையில் செலுத்தியதில் அவரது பங்கு மகத்தானது.

**இளமைக்காலம்** :

ஹுனான் மாநிலத்தில் 1893-ல் வேளாண்குடியில் பிறந்த மாவோ ஒரு பிறவிப் புரட்சியாளர். தந்தை அவரை ஒரு விவசாயியாகவே வளர்க்க நினைத்தார். அதை விரும்பாத மாவோ வீட்டைவிட்டு வெளியேறி சாங்சா என்ற இடத்திற்கு சென்றார். அங்கு தம் சுயமுயற்சியால் கற்றார். நூற்களைக் கற்பதிலும் சூரிய ஒளியில் சுற்றித்திரிவதிலும் ஆர்வம் காட்டினார்.

புரட்சிகரமான வாழ்வை விரும்பிய அவர் டாக்டர் சன்யாட்சென்னின் புரட்சி இயக்கமான துங் மெங் ஹுயில் சேர்ந்து பணியாற்றியதில் வியப்பில்லை. 1911-ஆம் ஆண்டு புரட்சிக்குப் பின் குறிக்கோளற்ற போர் வீரராகச் சுற்றித் திரிந்தார். 1918-ல் பீகிங் சென்று அங்குள்ள பல்கலைக் கழக நூலகத்தில் பணியாற்றினார். அச்சமயத்தில் அங்குள்ள பேராசிரியர் சென் து ஷியூவைச் சந்தித்தார். அவரது செய்தித்தாளான "நியூ யூத்" மாவோவின் சிந்தனையைக் கவர்ந்தது. பல்கலைக் கழக நூலகத்திலிருக்கும் போதே ரஷியப்புரட்சி பற்றி கேள்வியுற்றார். மற்றும் கார்ல் மார்க்சின் கருத்துக்களையும் கற்றார். 1919-ல் சென் து ஷியூ தொடங்கிய "மார்க்சிய ஆய்வுக் குழுவில்" ஓர் உறுப்பினரானார். சீனக்கம்யூனிஸ்ட் கட்சி 1920-ல் தொடங்கப்படும்போது அதன் முதல் 12 உறுப்பினர்களுள் மாவோவும் ஒருவர்.)

**இலையுதிர்கால அறுவடை எழுச்சி** :

சீன கம்யூனிஸ்ட்கட்சி 1927 வரை கோமின்டாங் கட்சியுடன் இணைந்து செயலாற்றியது. அவ்வாண்டில் இரு கட்சிகளுக்கிடையிலான நாடர்பு துண்டிக்கப்பட்டதோடு கம்யூனிஸ்டுகள் மீது கோமின்டாங்குகள் பகர தாக்குதல்களைத் தொடர்ந்தனர். இச்சமயத்தில் மாவோ கியாங்சி மாநில * கிராமப்புறங்களுக்குச் சென்று குடியானவர்களை கிளர்ந்தெழச் செய்தார். '. அது "இலையுதிர் அறுவடை கால எழுச்சி" என வரலாற்றில்சிறப்பிக்கப்படுகிறது. -

இச்சமயத்தில் கம்யூனிஸ்ட் தலைமையிலும் மாற்றம் செய்யப்பட்டது. சென்து ஷியூ பதவி நீக்கம் செய்யப்பட்டு மாவோ தலைமைப் பொறுப்பேற்றார். அவர் குடியானவர்களை புரட்சியாளர்களாக மாற்ற எண்ணி சூடே என்பாருடன் இணைந்து சீன செஞ் சேனையை உருவாக்கினார். 1930 ஆம் ஆண்டளவில் கியாங்சி, ஹுனான் பகுதிகளில் 15 செஞ்சேனை மையங்களிருந்தன. அதனை தொடர்ந்து சீன சோவியத்துக்களும் உருவாக்கப்பட்டன. மறு ஆண்டில் கியாங்சியிலுள்ள ஜுய்சிங் என்ற இடத்தில் கிராமிய தொழிலாளர் அரசை நிறுவினார். அதனை "சீன சோவியத் குடியரசு" என்று பிரகடனம் செய்தார்.

**நீண்ட அணிவகுப்பு பயணம் (1934) :**

1930 லிருந்து 1933 வரை கோமின்டாங் அரசு கியாங்சி மாநில சீன சோவியத் அரசு மீது 4 தடவை தாக்குதல் தொடுத்தது. ஆனால் கொரிலாப் போர் முறையில் கைதேர்ந்த செஞ்சேனையினர் அதனை முறியடித்தனர். 1933-ல் 5 ஆம் முறையாக கோமின்டாங் படையினர் பெருமளவில் வந்து கியாங்சி பகுதியைச் சூழ்ந்து கொண்டனர். எப்பக்கமும் பகைவர் படையால் சூழப்பட்ட கம்யூனிஸ்டு படையினர் அந்த முற்றுகை வளையத்தை உடைத்து வெளியேறினர். 85,000 போர் வீரர்களையும், 15,000 அலுவலர்களையும் கொண்ட கம்யூனிஸ்டுகள் மாவோ தலைமையில் முதலில் தென்மேற்கு திசையிலும் பின் வடக்கு நோக்கியும் அணிவகுத்துச் சென்றனர். இது வரலாற்றில் நீண்ட அணிவகுப்புப் பயணம்' எனச் சிறப்பிக்கப்படுகிறது. பின்னால் கோமின்டாங் படையினர் அவர்களை தாக்குவதற்கு தொடர்ந்து வந்து கொண்டிருந்தனர். எனினும் மலைகளையும், ஆறுகளையும், காடுகளையும் கடந்து ஆறாயிரம் மைல் பயணம் செய்து வடமேற்கிலுள்ள ஷென்சி மாநில மலையடிவாரத்திற்கு சென்றனர். தொலைதூரத்தில் மலைகளால் சூழப்பட்ட அந்த பாதுகாப்பான இடத்தில் தங்கள் முகாம்களை அமைத்துக் கொண்டனர். அங்கு மாவோ தலைமையில் கம்யூனிஸ்டுகள் ஒரு அரசாங்கமே நடத்திவந்தனர். செஞ்சேனையை சீரமைத்தனர். நிலச் சீர்திருத்தம் போன்ற பல முற்போக்கு சீர்திருத்தங்களையும் நிறைவேற்றினர்.

**தேசிய ஐக்கிய முன்னணி** :

சியான் நிகழ்ச்சிக்குப்பின் 1937-ல் சீனக் கம்யூனிஸ்டுகளுக்கும் கோமின்டாங்களுக்குமிடையில் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அதன் பயனாக ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்துப் போராட தேசிய ஐக்கிய முன்னணி அமைக்கப்பட்டது. கம்யூனிஸ்டுகள் தற்காலிகமாக தங்கள் சோவியத்துக்களை கலைத்து செஞ்சேனை படைப்பிரிவை கோமின்டாங் தலைமையின் கீழ் செயல்பட இசைந்தனர்.

1937-லிருந்து 1945 வரை ஜப்பானை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்தில் கம்யூனிஸ்டுகள் தீவிரப் பங்கு பெற்றனர். எனினும் இருதரப்பார்களுக்கிடையில் பழைய பொறாமை அவநம்பிக்கை தலைதூக்கி பரஸ்பாம் மோதல்களும் நிகழ்ந்தன. எனினும் கம்யூனிஸ்டுகள் ஜப்பானியர்களை எதிர்த்துப் போராடுவதைக் கைவிடவில்லை. தொடர்ந்து தங்கள் படைவலிமையையும் பெருக்கிக் கொண்டேயிருந்தனர். 1945-ல் ஜப்பான் சரண்டையும் போது செஞ்சேனையில் மூன்று மில்லியன் வீரர்கள் இருந்தனர்.

**உள்நாட்டுப் போர்** :

ஜப்பான் சரணடைந்தபோது வட சீனாவில் அதன் ஆக்கிரமிப்பின் கீழ் இருந்த பெரும்பகுதியை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதில் வெற்றி பெற்றனர். சீனாவின் ஆதிக்கம்பற்றி கோமின்டாங்களுடன் மோதுவதற்கும் தயாராயினர். அமெரிக்கா தனது வெளியுறவு அமைச்சர் ஜார்ஜ் மார்ஷல் என்பாரை சீனாவிற்கு அனுப்பி இரு தரப்பினருக்கும் இடையில் அமைதி ஏற்படுத்த முயற்சித்தது. அது வெற்றி பெறவில்லை. அதனைத் தொடர்ந்து 1948-ல் உள்நாட்டுப் போர் மூண்டது. கம்யூனிஸ்டுகள் லின் பியாவோ தலைமையில் மக்கள் விடுதலைப் படையை உருவாக்கிப் போராடினர். ஊழல் மிகுந்த செல்வாக்கற்ற கோமின்டாங் அரசுப் படைகள் படுதோல்வியடைந்தன. இறுதியில் கம்யூனிஸ்டுகள் வெற்றிபெற்றனர். 1949 அக்டோபர் முதல் தேதியில் மா சே துங் பீகிங்கில் சீன மக்கள் குடியரசை நிறுவினார்.

**மாசே துங்கின் கொள்கைகள்** :

**i) புதிய ஜனநாயகம் (New Democracy) :** மாசேதுங்கின் கருத்துப்படி சீனா முழுமையான சோஷலிச மாற்றத்திற்கு தகுதியானதாக இல்லை குடியானவர்களை மிகுதியானவர்களாகக் கொண்ட சீன சமுதாயம் வகுப்புப் போராட்டத்திற்கும் தகுதியானதாக இல்லை . தனியார், அரசு, கூட்டுறவு ஆகியவற்றால் நிர்வகிக்கப்படும் கலப்புப் பொருளாதார முறையே தற்போது சீனாவிற்கு ஏற்றது. ஆனால் நிலச்சீர்திருத்தம் உடனடியாக செய்யப்பட வேண்டும். எனவே தற்காலிகமாக குடியனாவர், தொழிலாளர், தேசிய பூர்ஷுவாக்களின் கூட்டு அரசு ஏற்படுத்தப்பட வேண்டும். நாளடைவில் பூர்ஷுவாக்கள் அதிலிருந்து வெளியேற்றப்பட்டு முழுமையான பாட்டாளிகளின் சர்வாதிகாரம் நிறுவப்படும். டாக்டர் சன்யாட் சென்னின்

மூன்று கொள்கைகளின்" மறுபதிப்புதான் தமது "புதிய ஜனநாயக மாவோ விளக்கமளித்தார்.

**ii) ஆயிரம் மலர்கள் மலரட்டும் :** இந்த கருத்தில் "நூறு சிந்தனை கருத்துக்கள் பூக்கட்டும்" என்று விளக்கமளித்கள் மூலம் தற்காலிகமாக கருத்து சுதந்திரத்திற்கும் ஆதரவளித்தார்.

**iii) பண்பாட்டுப் புரட்சி :** பழைய கருத்துக்கள், பண் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை ஒழித்து புதிய கலாச்சாரம் தோல் பகள், வேண்டும் என்று வலியுறுத்தினார். கலை, இலக்கியம் ஆகிய எஞ்சியிருக்கும் பூர்ஷுவா தன்மைகள் அகற்றப்பட வேண்டும் . அறிவுறுத்தினார். கட்சி கோட்பாடுகளில் குழப்பம் விளைவிக்கும் திரிபுவாதிகளும் முதலாளித்துவ ஆதரவாளர்களும் வெளியேற்றம் வேண்டும் என்றும் அறைகூவல் விடுத்தார்.

**iv) ஆயுதப் புரட்சி :** துப்பாக்கி முனையிலிருந்துதாம் அதிகாரம் பிறக்கிறது என்ற கருத்தினை கூறிய அவர் வன்முறையில் ஆயுதப் புரட்சி மூலம்தான் சமதர்ம சமுதாயம் அமைக்க முடியும் என் அறிவித்தார்.

**மதிப்பீடு :**

ஒரு நூற்றாண்டு காலத்திற்குப் பின் சீனாவில் ஒரு ஆற்றல் மிகு வலிமையான அரசை நிறுவிய பெரும மாசேதுங்குடையது ஆகும். புகழ் பெற்ற மார்க்சிய கோட்பாட்டை சீன சமூகசூழ்நிலைக்கு ஏற்ப மாற்றி அமைத்தது அவருடைய சிறப்பான சாதனையாகும். மஞ்சுகளின் வல்லாட்சியை "பட்டாளிகளின் சர்வாதிகாரமாக" மாற்றினார். கோமின் டாங்குகளின் தேசிய அரசை வலிமைமிகு ஓர்முகப்படுத்தப்பட்ட வல்லாட்சியாக ஆக்கினார். சியாங்கே ஷேக் சீனாவை பன்னாட்டு அரசியலரங்கில் கௌரவமான நாடாக உலாவவிட்டார் என்றால் மாசே துங் சீனாவை வல்லரசாக மாற்றினார். ரஷியாவில் ஸ்டாலினைப் போல சீனாவில் அசைக்க முடியாத எஃகு மனிதனாக விளங்கினார். பதவியை விட்டு விலகிய பின்னரும் மாபெரும் தலைவராகப் போற்றப்பட்டார். சன்யாட சென்னை நவீன சீனாவின் தந்தை என்றால் மாசேதுங் கம்யூனிஸ்ட் சீனாவின் கடவுளாக வணங்கப்படுகிறார்.

வினாக்கள்: | 1. சீன வரலாற்றில் மா சே துங்கின் பங்கினை ஆராய்கள்

2 மோசே துங் ஒரு புரட்சியாளர் மட்டுமல்ல ஆற்றல் நிர்வாகியும்கூட" - ஆராய்க.)

**பண்பாட்டுப் புரட்சி**

**முன்னுரை :**

பதினைந்தாண்டு கால கம்யூனிச ஆட்சி சீனாவில் அரசியல் பொருளியல் மாற்றத்தை ஏற்படுத்தியதைப் போல் சமுதாய மாற்றத்தை ஏற்படுத்திவிடவில்லை . அதே சமயத்தில்

ஆட்சியில் சில சலிப்புகளும் பொருளியலில் சில சரிவுகளும் நிகழ்ந்தன. மாவோவின் தலைமையிலும் சில தடுமாற்றங்கள் ஏற்பட்டன. மீண்டும் ஒரு புரட்சி அனுபவம் ஏற்பட்டாலன்றி இளைய தலைமுறையினரிடையே நம்பிக்கை ஏற்படுத்திவிட முடியாது என உணரப்பட்டது. எனவே ஒரு பண்பாட்டுப் புரட்சி மூலம் சமூக மாற்றத்தையும், சமூக மாற்றத்தின் மூலம் அரசியல் விழிப்புணர்வையும் ஏற்படுத்திவிடலாம் என்று எதிர்ப்பார்க்கப்பட்டது. அதன் விளைவே பாட்டாளிகளின் மாபெரும் பண்பாட்டுப் புரட்சி. 1965-ல் இலக்கிய கர்த்தாக்கள் கலைஞர்களை குறைகூறியதன் மூலம் ஏற்பட்ட தீப்பொறி விரைவில் பெரும் புரட்சியாக மாறி எஞ்சியிருந்த முதலாளித்துவ சமூகப் பண்பாடுகளை எரித்துச் சாம்பலாக்கி சீனாவை மாவோவின் சிந்தனைப் பூங்காவாக மாற்றியது.)

**பண்பாட்டுப் புரட்சி தோன்றிய சூழ்நிலைகள்** :

முதலாவதாக, பெரும் விளம்பரங்களுடன் தொடங்கப்பட்ட "பெரும் முன்னோக்கித்தாவல்" இயக்கமும் கம்யூன் அமைப்பும் தோல்வியில் முடிந்தது. இதனால் பொருளியல் குழப்பங்களோடு மனக்குழப்பங்களும் ஏற்பட்டன. விரைவாக சோஷலிச குறிக்கோளை அடையவேண்டும் என்ற விருப்பில் விறுவிறுப்புடன் கடைப்பிடிக்கப்பட்ட குறுக்கு வழிகள் குளறுபடிகளாயின. அதனால் ஏற்பட்ட பொருளியல் நெருக்கடிகளையும், அரசியல் அதிருப்திகளையும் மறைப்பதற்கும் மறக்கடிப்பதற்கும் "புதிய கோஷம்" தேவைப்பட்டது.

இரண்டாவதாக, மாவோவின் திட்டங்கள் நடைமுறைக்கு உகந்தவையல்ல என்ற கருத்து பரவலானது. சோஷலிசத்தை கொண்டுவர அவர் கடைப்பிடித்த கம்யூன்முறை "டான்குயிக் ஷாட்" செயல்களைப் போன்று நகைப்பூட்டுவதாக உள்ளது என ஏளனம் செய்தனர்.

மூன்றாவதாக, ரஷியாவில் ஸ்டாலினிச ஒழிப்பு, தனி நபர் வழிபாட்டு ஒழிப்பு, கூட்டுத்தலைமை ஆகியவை சீனாவிலும் எதிரொலிக்கத் தொடங்கின. எனவே 1956 செப்டம்பரில் கூடிய சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் எட்டாவது மாநாடு மாவோ வழிபாட்டை மறைமுகமாக கண்டித்தது. மாவோவின் சிந்தனைகள்தாம் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்துக் கருவூலம் எனக் கூறுப்படுவது நிறுத்தப்பட்டது.

'நான்காவதாக, ரஷிய சீனத்தலைவர்கிடையே ஏற்பட்ட கோள் கருத்துவேறுபாடுகள் இரு நாடுகளிடையே பகை உணாவை தோற்றுவிக் அதனால் ரஷியா சீனாவிற்களித்து வந்த உதவிகளை முன்னறிவிப்பு திடீரென நிறுத்திக் கொண்டது. இரு நாடுகளிடையே எல்லைத் தகாக மூண்டது. எனவே ரஷியத் தலைவர்களை மாவோ திரிபுவாதிகள் என் கண்டனம் செய்தார். சீன கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு பிரிவினர் மாவோவில் இந்தப்போக்கு ரஷியாவுடன் மோதலை ஏற்படுத்திவிடும் என்று அஞ்சினர் மேலும் சீன பொருளியல் வளர்ச்சிக்கு ரஷிய உதவி இன்றியமையாதது என்றும் கருதினர்.

நான் ஐந்தாவதாக சீனக்குடியரசுத் தலைவரான லி, யூஷாவோசி கட்சியின் செயலாளரான டெங் ஷியோ பிங் ஆகியோர் மாவோவின் கோட்பாடுகளையும் செயல்பாடுகளையும் வெறுத்தனர். அவர்கள் தீவிர கம்யூனிசப் பாதையினின்றும் சற்று நெகிழ்ந்து கொடுக்கும் தாராளக் கோட்பாட்டு வழியில் செல்ல முயன்றனர். அதோடு ரஷியாவையும் சற்று அனுசரித்து செல்ல எண்ணினர். இவர்களை "முதலாளித்துவ சாலையில் செல்பவர்கள்" எனப் பழித்து பதவியினின்று வெளியேற்ற மாவோ திட்டமிட்டார்.

இறுதியாக, கலை, இலக்கியங்களில் மீண்டும் வலதுசாரி கருத்துக்கள் புத்துயிர் பெற்றது தீவிர கம்யூனிஸ்டுகளுக்கு பிடிக்கவில்லை. பண்டைய வரலாற்றுச் சிறப்புகளைப் போற்றுவது,

மனிதவியல் உணர்வுகளுக்கும் புலன் நுகர்வுகளுக்கும் முக்கியத்துவம் கொடுப்பது ஆகியவை புரட்சி உணர்வுகளுக்கு எதிரானவை; பூர்ஷுவா சமுதாயத்திற்கே பொருந்துபவை என அவர்கள் கருதினர். பண்டைய சமூக அரசியலை கருப்பொருட்களாகக் கொண்டு இலக்கியம் படைப்பதை எதிர்த்தனர்.

**புரட்சியின் தொடக்கம்** :

“விடுதலைப் படை" என்ற நாளிதழ் 1965 நவம்பர் இதழில் பீகிங் பல்கலைக்கழகப் பேராசிரியர்களின் முதலாளித்துவ சார்பான இலக்கியப் படைப்புகளைக் கண்டித்து கட்டுரை ஒன்று வெளியிட்டது. இதுதான் பண்பாட்டுப் புரட்சியைத் தூண்டிவிட்டது எனலாம். இதனைத் தொடர்ந்து இலக்கியச் சுவையை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு எழுதப்படும் இலக்கியங்கள் அனைத்தும் கண்டனத்திற்குள்ளாயின. அத்தகைய இலக்கிய கர்த்தாக்கள் முதலாளித்துவ சமுதாய அமைப்பை பாதுகாக்க முயல்பவர்கள் எனக் கண்டிக்கப்பட்டனர். 1966 ஜுனில் பீகிங் பல்கலைக்கழக முதல்வரையும் அவரது செயல்பாடுகளையும் தாக்கி ஷாங்கை நகரில் சுவரொட்டிகள் காணப்பட்டன. இது நாடெங்கும் பரபரப்பை ஏற்படுத்தியது புரட்சிகர சமுதாயத்திற்கு இத்தகைய இலக்கியங்கள் உகந்ததல்ல என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. அது முதலாளித்துவ சாலைக்கு' மக்களை அழைத்துச் சென்றுவிடும் என அஞ்சப்பட்டது.

இச்சமயத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் எட்டாவது குழு கூடி இத்தகைய முதலாளித்துவ சிந்தனைப் போக்குகளை அகற்றுவதற்கு பண்பாட்டு ரீதியில் புரட்சி தேவை எனத் தீர்மானமியற்றியது. அப்புரட்சிக்கான பதினாறு அம்ச திட்டமொன்றை வகுத்தது. இவ்வாறு பண்பாட்டுப் புரட்சிக்கு அதிகாரபூர்வமான ஆதரவு காட்டப்பட்டது.

**புரட்சி பரவுதல்** :

முதலில் சீன சமுதாயத்தின் அடித்தளத்தில் இன்னமும் குடி கொண்டிருக்கும் பூர்ஷுவா பழக்கவழக்கங்களை ஒழிக்க வேண்டும் எலற குரல் எழுப்பப்பட்டது. அவ்வாறு ஒழிக்கப்பட வேண்டிய “நான்கு பழமை பண்புகள்” கோடிட்டுக்காட்டப்பட்டன. அவை

i) பழைய பாரம்பரியங்கள்

ii) பழைய பழக்கவழக்கங்கள்

iii) பழைய கலாச்சாரம்

iv) பழைய எண்ணங்கள்

இந்த பழமை நான்கும் ஒழிக்கப்பட்டு புதிய பாரம்பரியம், புதிய பழக்கவழக்கங்கள், புதிய கலாச்சாரம், புதிய எண்ணங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டும் என்றும் குரலெழுப்பப்பட்டது.

**கட்சி களையெடுப்பு** :

- பண்பாட்டுப் புரட்சியின் ஒரு முக்கியமான நிகழ்ச்சி என்னவென்றால் மாவோ தமது கருத்திற்கெதிரான பிற தலைவர்களை கட்சியிலிருந்து வெளியேற்றியதுதான். அவர்களுள் முக்கியமானவர்கள்

லியூ ஷாவோசி - குடியரசுத் தலைவர் டெங் ஷியோ பிங் - கட்சி செயலாளர்

பென்சென் - பீகிங் நகர மேயர்

**பண்பாட்டுப் புரட்சி குழுக்கள் நிறுவப்படல் :**

- பண்பாட்டு புரட்சியை தீவிரப்படுத்த 1966 நவம்பரில், 172 உறுப்பினர்களைக் கொண்ட “மத்திய கலாச்சார புரட்சிக் குழு” நிறுவப்பட்டது. இதன் தலைவர் சென் போ தா. இவர் மாவோவின் தனிச் செயலர் என்பது குறிப்பிடத்தக்கது. துணைத்தலைவர் சியாங்-சிங். இவர் மாவோவின் மனைவி. இதனைத் தவிர லின் பியாவோ தலைமையில் படைக்குழுவும் சௌ என் லாய் தலைமையில் அரசுக்குழுவும் நிறுவப்பட்டது.)

**சுவரொட்டிகள் :**

பண்பாட்டு புரட்சிக் கருத்துக்களைப் பரப்புவதிலும் மக்களிடை எழுச்சி உண்டு பண்ணுவதிலும் சுவரொட்டிகள் முக்கியப் பங்குவகிக்கின்றன. இது அதிக செலவில்லாத மக்கள் தொடர்பு சாதனமாகப் பயன்படுத்தப்பட்ட ஏற்கனவே குறிப்பிட்டபடி பீகிங் பல்கலைக்கழக முதல்வரைக் குறைத் முதல் சுவரொட்டி ஷாங்கை நகரில் காணப்பட்டது. அதன் பின் கவர்ச்சிகரமான வாசகங்களுடன் கூடிய சுவரொட்டிகள் நாடெங்கும் காணப்பட்டன. ஒரு சமயத்தில் மா சே துங் கூட சுவரொட்டி வாசகங்களை தயாரித்தார். “தலைமையகத்தை தாக்குங்கள்" என்ற தலைப்பிட்டு வாசகங்களைத் தயாரித்தார்.

**செங்காவலர்கள் :**

பண்பாட்டுப் புரட்சி செய்தியை நாடெங்கும் எடுத்துச் சென்றவர்கள் “செங்காவலர்கள்” (Red Guards) என்ற இளைஞர்கள்தாம். உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் கல்லூரியில் பயிலும் துடிப்புள்ள மாணவர்களை மாவோ தேர்ந்தெடுத்து “செங்காவலர்கள்” என்ற அணியாக செயல்பட அனுமதித்தார். அவர்களுக்கு நாடெங்கிலும் செல்லும் பேருந்து, புகைவண்டி ஆகியவற்றில் பயணம் செய்ய இலவச அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டன. அவர்கள் நாடெங்கிலும் புரட்சியின் ஈட்டிமுனைகளாகப் பாய்ந்து நான்கு பழமைகளைத் தாக்கி அழித்தனர். மாவோவின் சிந்தனைகளை நாடெங்கும் பரப்பினர். அவரது சிந்தனைக் கருத்துக்கள் அடங்கிய ‘சிறிய சிகப்பு நூல்' பைபிளாகக் கருதப்பட்டது. நாடெங்கிலும் உள்ள பூர்ஷுவா சின்னங்களை அழித்தனர். வெளியார் செல்வாக்கு சாயல்படிந்த விளம்பரப் பலகைகளைக் கூட விட்டுவைக்கவில்லை. நவீன ஆடை அணிந்தவர்களையும் தலை அலங்காரம் கொண்டவர்களையும் எள்ளி நகையாடினர். பல பொது இடங்களுக்கு புதிய பெயர்கள் சூட்டினர். ரஷிய தூதரகம் அமைந்துள்ள சாலைக்கு “திரிபுவாதிகளின் சாலை” எனப்பெயர் சூட்டினர். தனியார் சொத்துக்களுக்குக்கூட சேதம் விளைவித்தனர்

**மக்கள் விடுதலைப்படை :**

லின் பியாவோ தலைமையிலுள்ள மக்கள் விடுதலைப்படை அரசியல் கட்சிபோல் செயல்பட்டது. ஒரே மாதிரி உடையோ, தகுதி உயர்வோ இல்லாத இப்படைவீரர்கள் கட்சித் தொண்டர்களாக பண்பாட்டு மாறுதல்களுக்குப் போராடினர். அவர்கள் பண்ணைகளும் தொழிற்கூடங்களும் அமைத்தனர். (

**அதிகாரத்தைக் கைப்பற்றுதல் :**

பண்பாட்டு புரட்சியின் இறுதிக்கட்டமாக பழமையாளர்கள் கரங்களிலிருந்த அதிகாரம் கைப்பற்றப்பட்டது. மாவோ ஆதரவாளர்கள் பதவிப் பொறுப்புகளில் நியமனம் பெற்றனர்.

நாட்டிலுள்ள அனைத்து மாநிலங்கள், சுய ஆட்சிப் பகுதிகள், நகராட்சிகளில் புரட்சிக் குழுக்கள் நிறுவப்பட்டன. அவைகள் தாம் அதிகாரத்தை ஏற்று நடத்தின. )

**புரட்சியின் முடிவு** :

1 இவ்வாறு "முதலாளித்துவ சாலையில்" செல்வோர்கள் பதவியிலிருந்து அகற்றப்பட்டு உண்மையான புரட்சி சிந்தனையுள்ளவர்கள் அதாவது மாவோ ஆதரவாளர்கள் அப்பதவிகளில் அமர்த்தப்பட்டதுடன் பண்பாட்டு புரட்சி வெற்றிகரமாக முடிந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. 1969 ஏப்ரலில் கூடிய கட்சியின் 9வது மாநாட்டில் மாவோ தலைவராகவும் லின்பியாவோ துணைத்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கட்சியின் விதிகள் மாவோ, சிந்தனைகள் தாம் உண்மையான வழிக்காட்டி என மீண்டும் உறுதி செய்தன. (

**பண்பாட்டு புரட்சியின் முக்கியத்துவம்** : /

"சிந்தனை, - பண்பாடு, பழக்க வழக்கங்கள் ஆகியவை போராட்டங்களிலிருந்துதான் தோன்றுகின்றன. பழமை மீண்டும் ஆதிக்கம் செலுத்தும் அபாயமிருக்கும் வரை போராட்டம் நீடிக்க வேண்டும்" என்ற மாவோவின் கூற்றுப்படி பார்த்தால் உண்மையில் அது ஒரு பண்பாட்டு புரட்சியாகத் தோன்றுகிறது. உண்மையில் பழமைப் பாரம்பரியங்கள் மீண்டும் ஆதிக்கம் செலுத்துவது தடுத்து நிறுத்தப்பட்டது. பூர்ஷுவா சிந்தனைகள் அடியோடு அகற்றப்பட்டன. ஆனால் செங்காவலர்கள் நடவடிக்கைகள் வன்முறைக் கும்பலின் செயல்பாடுகளையே நினைவூட்டுகின்றன. தமது அரசியல் எதிரிகளை கட்சியிலிருந்து களையெடுக்க மாவோ இந்தப் புரட்சிச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டார். பெரும் முன்னோக்கித் தாவல் இயக்கம் மற்றும் கம்யூன் அமைப்பு தோல்வியினால் மக்களிடையே ஏற்பட்ட அவநம்பிக்கை, சோர்வு, தனிநபர் உரிமை, முதலாளித்துவ பொருளியல் முறை ஆகியவை மீண்டும் எந்த வடிவத்திலும் தலை தூக்காதவாறு செய்துவிட்டது. கம்யூனிஸ்ட் கட்சியும் தனது கட்டுக்கோப்பையும் கடுமையான ஒழுங்குமுறைகளையும் பெற்றது.)

இந்தப் பண்பாட்டு புரட்சி ரஷியாவிற்கும் சீனாவிற்குமிடையிலான பிளவினை அதிகரித்தது. இந்த புரட்சியின் போது ரஷிய தூதரக அதிகாரிகள் பொது இடத்தில் அவமதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. எல்லாவற்றிற்கும் மேலாக இப்புரட்சி சீன அரசியலில் மாவோவின் செல்வாக்கை அசைக்க முடியாதவாறு செய்துவிட்டது. அவரோடு கருத்துமாறுபாடு கொள்பவர்கள் எவ்வளவு பெரிய தலைவர்களாயிருந்தாலும் முகவரி இல்லாமல் போய்விடுவர் என்பதை எடுத்துக்காட்டியது. சுருங்கக்கூறின் இப்புரட்சி மாவோவை "சீன ஸ்டாலினாக" உயர்த்திவிட்டது என்று கூறினால் அது மிகையன்று. பாப்பா

வினா :

1. பண்பாட்டு புரட்சி என்றால் என்ன? அது தோன்றியதன்

காரணங்களையும் விளைவுகளையும் ஆராய்க.')

**கம்யூனிஸ்ட் சீனாவின் வெளியுறவுக் கொள்கை** !

**முன்னுரை** :

ஒரு நாட்டின் வெளியுறவுக் கொள்கை அந்நாட்டின் புவியியல் அமைப்பு, பொருளியல் வளங்கள், வரலாற்றுப் பாரம்பரியங்கள், அரசியல் கோட்பாடுகள் ஆகியவற்றின்

அடிப்படையில் அமையும். சீன வெளியுறவுக் கொள்கையும் ஏறத்தாழ இதே அடிப்படையில் தான் உருவாகியுள்ளது. எனினும் சீன வெளியுறவுக் கொள்கை “ஹான் ஏகாதிபத்தியம், சீன தேசியம், மாசே துங்கின் புரட்சிகரமான வெல்திறன் ஆகியவற்றின் கலவை” என்றும் கூறப்படுகிறது. சீனா பன்னாட்டு கம்யூனிசத்திற்கு கட்டுப்பட்டது என்றாலும் மாசேதுங்கும் அவரது ஆதரவாளர்களும் மனத்தளவில் தேசியக் கம்யூனிஸ்டுகள். எனவே தேசிய உரிமை, இறைமை, ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பாதுகாப்பதே சீன வெளியுறவுக் கொள்கையின் தலையாய நோக்கமாயிருந்தது. அதில் மார்க்சிய மாவோயிசக் கோட்பாட்டுச் சாயல்கள் படிந்திருப்பதையும் காணலாம்.)

**வெளியுறவுக் கொள்கையின் பல்வேறு கட்டங்கள்:**

கடந்த நாற்பதாண்டு காலத்தில் சீன வெளியுறவுக் கொள்கை அந்தந்த காலச் சூழலுக்கு ஏற்றவாறு மாற்றம் பெற்று வந்துள்ளது. வெளியுறவுக் கொள்கை வளர்ச்சியில் நான்கு தெளிவான காலகட்டங்களைக் காணலாம். (

**முதல் கட்டம் (1949 முதல் 1952 வரை) :**

இக்கால கட்டத்தில் சீன வெளியுறவுக் கொள்கையின் முதன்மையான அம்சம், உலக நாடுகளாலும் ஐ.நா. சபையாலும் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்பதேயாகும். ஆசியாவில் கம்யூனிசம் பரவ உதவுவது. ஏகாதிபத்தியங்களுக்கு எதிரான தேசிய விடுதலை இயக்கங்களுக்கு ஆதரவளிப்பது ஆகியவை பிற அம்சங்களாகும். இக்கால கட்டத்தில் ரஷிய, அமெரிக்க முகாம்களுக்கிடையில் கடுமையான கெடுபிடிப்போர்

நடைபெற்றது. மாசேதுங் கூறியபடி இவ்விரு முகாம்களுள் எதிலும் சேராமல் மதில்மேல் பூனையாக இருப்பதல்ல சீனாவின் கொள்கை. ஒருபுறம் சாய்ந்திருப்பதே அதாவது ரஷியா பக்கம் சார்ந்திருப்பதே கொள்கையெனத் திட்டவட்டமாக அறிவித்தார். எனவே அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகளுடன் கடும் பகைமை நிலவியது. ஏனென்றால் அவை தைவானில் உள்ள சியாங் கே ஷேக்கின் கோமின்டாங் அரசுதான் சீனாவின் உண்மை அரசு என்று அறிவித்தன. கம்யூனிஸ்ட் சீனாவிற்கு அங்கீகாரமளிக்க மறுத்தன. அதே சமயத்தில் ஆசிய நாடுகளுடனும் கூட்டுச் சேரா நாடுகளுடனும் நல்லுறவு கொள்ள முயன்றது. எனினும், திபெத்தை ஆக்கிரமித்தது, கொரியாப்போரில் ஈடுபட்டது ஆகியவை அண்டை நாடுகளில் சீனாவின் நல்லெண்ணத்தின் மீது ஐயம் கொள்ளச் செய்தது.

**இரண்டாம் கட்டம் (1952-58) :**

இக்கால கட்டத்தில் சீனா கூட்டுச் சேரா நாடுகளுடன் நல்லுறவு கொள்வதில் வெற்றி பெற்றது. 1955ல் பாண்டுங்கில் கூடிய ஆசிய ஆப்பிரிக்க நாடுகளின் மாநாட்டில் அந்நாடுகளின் நண்பன் என்பதை வெளிப்படையாகக் காட்டியது. அமெரிக்காவுடனான உறவு தொடர்ந்து சீர்கெட்டிருந்தது. ரஷயாவுடனான உறவில் விரிசல் ஏற்படுவதற்கான அறிகுறிகள் தோன்றின. பன்னாட்டு அரசியலரங்கில் ஏகாதிபத்தியங்களைத் தொடர்ந்து எதிர்த்து வந்தது. 1956ல் பிரிட்டன், சூயஸ் கால்வாய் சிக்கலில் எகிப்தோடு போர் புரிந்ததை கடுமையாகக் கண்டித்தது. அரபு - இஸ்ரேல் சச்சரவில் அரபு நாடுகளுக்கு ஆதரவான கொள்கையைக் கடைப்பிடித்தது.)

தைவானைக் கைப்பற்றி சீனாவுடன் இணைக்க சில பூர்வாங்க ராணுவ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஆனால் அமெரிக்க ஏழாவது கப்பற்படை தைவானுக்கு பாதுகாப்பளித்து நின்றதால் சீனா தயங்கியது. இந்த முயற்சிக்கு எதிர்பார்த்தபடி ரஷிய உதவி கிடைக்காததால் சீனா ஏமாற்றமடைந்தது. முதன்முதலாக, ரஷியா உறவில் நெருடல் ஏற்பட்டது.

**மூன்றாவது கட்டம் (1958-70) :**

இக்காலகட்டத்தில் ரஷியாவுடனான உறவு சீர்கெட்டது. எல்லைத் தகராறு ஏற்பட்டு ராணுவ ஒப்பந்தத்தை ரத்து செய்வதாக ரஷியப் பிரதமா

12 288 இருஷேவ் அறிவித்தார். திபெத்தில் சீன ஆட்சிக்கு எதிராக மக்கள் களாநதெழுந்த போது கண்மூடித்தனமாக அடக்கு முறை மூலம் ஒடுக்கப்பட்டது. அந்நாட்டுத் தலைவர் தலாய்லாமா திபெத்திலிருந்து தப்பி வந்து இந்தியாவில் தஞ்சம் புகுந்தார். அவருக்கு அடைக்கலம் கொடுத்ததால் சீனா இந்தியாவை பகை நாடாகக் கருதத் தொடங்கியது. இந்தியாவுடன் எல்லைத் தகராறில் ஈடுபட்டு 1962 அக்டோபரில் மக்மோகன் எல்லைக் கோட்டை தாண்டி இந்தியாமீது படையெடுத்தது.

அ அதன்பின் மூன்றாம் உலக நாடுகளுக்கு தானே தலைவர் என்பதுபோல் நடந்து கொண்டது. ரஷியாவுடன் பிளவு அதிகரித்ததால் கம்யூனிச உலகிற்கே தான்தான் தலைவர் என்று சொல்லாமல் சொன்னது. இக்காலகட்டத்தில் சீனா அணு ஆயுத நாடாக வளர்ச்சியுற்றது.

**நான்காம் கட்டம் (1970-76) :**

ரஷியாவிற்கும், சீனாவிற்குமிடையே பிளவு அதிகரிக்க அதிகரிக்க அமெரிக்காவும் சீனாவும் நெருங்கி வந்தது இந்தக் காலகட்டத்தின் மிகமுக்கிய நிகழ்ச்சியாகும். அதன் விளைவாக சீனா ஐ.நா. சபையில் தனக்குரிய இடத்தைப் பெற்றது. -

வினா : |

1. கம்யூனிச சீனாவின் வெளியுறவுக் கொள்கையை விவரி.

**முன்னுரை** :

1904-ல் தொடங்கி 1905-ல் போர்ட்ஸ்ம வுத் உடன்படிக்கைப்படி முடிவுற்ற ரஷ்ய-ஜப்பானியப் போர் ஜப்பான் மற்றம் ரஷ்ய வரலாறுகளில் ஒரு முக்கியமான நிகழ்ச்சியாகும். இப்போரில் மிகச்சிறிய நாடான ஜப்பான் மிகப்பெரிய நாடான ரஷ்யாவைத் தோற்கடித்தமையால் உலகநாடுகள் அனைத்தும் ஜப்பானின் வலிமையோடு ரஷ்யாவின் திறமையின்மை, வலிமையின்மை ஆகியவற்றை உணர்ந்து கொண்டன. தூரக்கிழக்குப் பகுதியின் அரசியலரங்கில் நடைபெற்ற இப்போரானது ஜப்பானை ஒரு வல்லரசு நிலைக்கு உயர்த்தினதால் இப்போரின் முக்கியத்துவத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.)

**காரணங்கள் : 1. ரஷ்ய - ஜப்பானியப் போட்டிகள் :**

ரஷ்யா, ஜப்பான் ஆகிய இரு நாடுகளுக்குமிடையில் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பல போட்டிகள் எழுந்தன. 1875 ஆம் ஆண்டில் ரஷ்யா சகாலின் தீவைக் கைப்பற்றிக் கொண்டது. குர்லி தீவை ஜப்பானுக்கு விட்டுக் கொடுத்ததே அதற்குக் காரணமென ரஷ்யா விளம்பியபோது அது ஜப்பானை ஆத்திரத்திற்குள்ளாக்கியது. கீழ்த்திசைப் பகுதிகளான கொரியா, மஞ்சூரியா ஆகியவற்றில் ரஷ்யாவும் ஜப்பானும் தம்முடைய செல்வாக்குகளைப் பெருக்கிக் தம்முடைய ஆதிக்கப்பகுதிகளாக அவற்றை மாற்ற முற்பட்டன. எனவே அந்நாடுகளுக்கிடையில் ஆதிக்கப் போட்டிகள் வலுப்பெறலாயின. ஜப்பான் தன்னுடைய ஆதிக்கப் பெருக்கத்திற்குத் தடைக்கல்லாக விளங்கக் கூடியது ரஷ்யா ஒன்றுதான் எனக் கருதி அத்தடைகளை உடைத்தெறியும் பொருட்டு ரஷ்யாவை எதிர்க்கத் தலைப்பட்டது. ) 2. **சீன-ஜப்பானியப் போரின் விளைவுகள் :**

1894-95 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட சிமனோஷ்கி உடன்படிக்கைப்படி முடிவுற்ற சீன - ஜப்பானியப் போர் ஜப்பானுக்கு ஆதரவாகத் திகழ்ந்தபோது ரஷ்யா விழித்துக்கொண்டது. தன்னுடைய

161 விரிவாக்கக் கோட்பாட்டிற்கு ஜப்பானின் வெற்றி பெருந்தடையாக இருக்குமென்பதை ரஷ்யா நன்கு புரிந்து கொண்டது. சிமனோஷ்கி உடன்படிக்கை காரணமாக லியோடுங் தீபகற்பத்தோடு போர்ட் ஆர்தர் துறைமுகத்தையும் ஜப்பான் சீனாவிடமிருந்து பெற்றுக் கொண்டது. அதனால் அச்சமுற்ற ரஷ்யா ஐரோப்பிய நாடுகளான ஜெர்மனி, பிரான்சு ஆகியவற்றுடன் இணைந்து 1895-ல் மூவரசுத் தலையீடு மூலமாக ஜப்பான் பெற்றிருந்த வெற்றிக்கனியாகிய லியோடுங் தீபகற்பத்தை மீண்டும் சீனாவிடமே திருப்பதித்தர வகை செய்தது. இது ஜப்பானை ரஷ்யாவுடன் வெறுப்பு உணர்வையும் விரோத மனப்போக்கையும் காட்டச் செய்தது. அத்துடன் 1896-ல் ரஷ்யா சீனாவுடன் 'லீ-லெபனோவ்' உடன்படிக்கை (Li Labanon-Treaty) என்ற இரகசிய உடன்பாட்டைச் செய்து கொண்ட போது தன்னைத் தாழ்வுறச் செய்வதற்காக ரஷ்யாவால் மேற்கொள்ளப்பட்ட உடன்பாடு இது என ஜப்பான் எண்ணியதால் ரஷ்யாவுக்கும் ஜப்பானுக்குமிடையிலான பகையுணர்வு மேலும் விரிவு அடைந்தது. அதற்குப்பின், ஏற்கனவே சிமனோஷ்கி உடன்படிக்கைப்படி ஜப்பான் வசமாயிருந்த லியோடுங் தீபகற்பத்தை ரஷ்யா 1898-ல் தன்வசமாக்கிக் கொண்ட போது ஜப்பான், ரஷ்யாவை மேலும் வெறுக்கலாயிற்று. எனவே போர் ஏற்படுவது தவிர்க்க முடியாததாயிற்று. -

**3.(கொரியச் சிக்கல்கள்** :

ஜப்பானின் இதயத்தை நோக்கித் திரும்பியுள்ள குத்துவாள் என்பது "ஜப்பானுக்கும் ஆசியாவின் முக்கிய நிலப்பகுதிகளுக்கும் இடையில் திகழும் பண்பாட்டுப் பாலம்" எனவும் வரலாற்றாசிரியர்களால் வர்ணிக்கப்பட்டுள்ள (கொரியாவே சீன ஜப்பானிய - ரஷ்யப் போட்டிகளுக்கு அடித்தளமாக அமைந்திருந்தது. 1895-ல் ஏற்பட்ட சிமனோஷ்கி உடன்படிக்கைப்படி கொரியாவின் விடுதலையானது சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டது. அவ்வமயம் தன்னுடைய சுயநலன்களின் அடிப்படையில் துறவி நாடாகிய கொரியாவை நவீன முறைகளை மேற்கொண்டு முன்னேற்றமடையச் செய்யவேண்டுமென்ற நோக்குடன் கொரிய விவகாரங்களில் ஜப்பான் தலையிட்டது. மேலும் 1885 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் கொரிய அரசியும் அவருடைய பாதுகாவல் அதிகாரிகளும் உள்நாட்டுக் கிடார்ச்சியாளர்களால் கொலை செய்யப் பட்டார்கள். கொரிய மன்னர் ரஷ் | தூதரகத்தில் சரணடைந்தார். இத்தகைய நிகழ்ச்சிகளுக்குக் காரணம் ஜப்பானின் தலையீடுகளே என கொரிய மக்கள் எண்ணினார்கள். அது ஜப்பானியர் மீது வெறுப்பினைத் தூண்டியது. இந்த எவ்வொப்பந்தபடி இருநாடுகளும் கொரியாவின் விடுதலை, தன்னுரிமை, றைமை, மேலாண்மை ஆகியவற்றை ஒப்புக்கொண்டன. மற்ற நாட்டின் ப்புதலின்றி இருநாடுகளும் கொரியாவுக்குப் படைகள், ஆலோசகர்கள் ஆகியோரை அனுப்புவதில்லை என ஏற்றுக்கொண்டன. ஆனால் அதற்கு மாறாக ரஷ்யா தன்னிச்சையாகக் கொரியாவின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டு வரலாயிற்று. மஞ்சூரியாவில் ரஷ்யா தனது ஆதிக்கத்தை வைத்துக் கொண்டு அதற்கு ஈடாக ஜப்பான் கொரியாவில் மேலாண்மையை | ஏற்படுத்திக்கொள்ள ரஷ்யா ஒப்புக்கொள்ள வேண்டுமெனக் கூறப்பட்டது. அதனை ரஷ்யா ஏற்க மறுத்துவிட்டது. எனவே கொரியாவைப் பற்றிய பூசல்கள் ரஷ்ய-ஜப்பானிய போருக்கு வலிமையான அடித்தளமாய் அமைந்துவிட்டது.)

**4. மஞ்சூரியப் பிரச்சனை :**

தூரகிழக்கில் மஞ்சூரியப் பகுதி முக்கியமானதோர் இடத்தில் அமைந்திருப்பதைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள ரஷ்யா விழைந்தது. 1896-ல் தன்னுடைய உதவியோடு சீனா உருவாக்கிய மஞ்சூரிய இருப்புப் பாதையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள ரஷ்யா முற்பட்டது. அதாவது 1899 ஆம் ஆண்டில் ரஷ்யா தன்னால் ஏற்கனவே உருவாக்கப்பட்டிருந்த டிரான்ஸ் சைபீரியன் இருப்புப்பாதையை போர்ட் ஆர்தர் துறைமுகம் வரை நீடிக்க எண்ணியது. அவ்வாறு செய்கையில் அவ்விருப்புப்பாதை வழியானது மஞ்சூரியவிலிருந்த ஹார்பினி, முக்டென், லியோபாங் வழியாகச் சென்றால் போர்ட் ஆர்தரை குறைந்த தூரத்தில் இணைத்து விடக்கூடியதாய் இருந்தது. அதற்கான நடவடிக்கைகளில் ரஷ்யா ஈடுபட ஆரம்பித்தபோது 1900-ல் ரஷ்யாவின் செல்வாக்கும் மஞ்சூரியாவில் அதிகரித்தமையால் ஜப்பான் அதனை எதிர்க்கத் தலைப்பட்டது)

**5. சீனாவின் குழப்பங்கள் : -**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் சீனாவில் மஞ்சு வம்சத்தினரின் வலிமையின்மை காரணமாகவே அயல்நாட்டினர் தம்முடைய - நாட்டினை ஆக்கிரமித்து, பொருளாதாரச் சுரண்டல்களுக்குத் தம்மை உள்ளாக்கி இன்னல்களுக்கு உட்படுத்துகின்றனர் என்ற எண்ணம் அதிகரித்தது. அதனால் இளஞ்சீனர் இயக்கம், பாக்ஸர் இயக்கம் போன்றவை தொடங்கப்பட்டன. அவற்றின் விளைவாக 1900த்தில் சீனாவில் ஏற்பட்ட பாக்ஸர் கலவரத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு ரஷ்யா மஞ்சூரியாவில் ஏராளமான துருப்புகளைக் குவதில் பிற நாடுகளிடம் குறிப்பிட்ட காலத்திற்குள் தனது படைகை திரும்பப்பெற்றுக் கொள்வதாக ரஷ்யா கூறியது. ஆனால் தனது சொல் அது காப்பற்றாது அதற்குமாறாக மஞ்சூரியாவைக் கவரத் திட்டமிட்ட ரஷ்யா உருவாக்க முற்பட்ட டிரான்ஸ் சைபீரியன் இருப்புப் பாதையும் ரஷ்யாவின் உள்ளார்ந்த நோக்கத்தை வெளிப்படுத்தியது. இந்நிலையில்தான் 1900 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் “சர்வதேச மீட்புப்படையெடுப்பு" (International Peking Relief Expedition) தொடங்கப்பட்டு அமெரிக்க ஐரோப்பிய, 'ரஷ்ய, ஜப்பானியப் படைகள் சீனாவுக்குள் அனுப்பப்பட்டன. பேரரசியார் த்வாகெர் சூஸி பதவியிழந்தார். இது ரஷ்யாவைத் தனது பணிகளைச் சீனாவில் செய்து முடிக்கக்கூடிய நல்வாய்ப்பினை நல்கியதுடன் ஜப்பானியரின் பெருகிவரும் செல்வாக்கினைத் தகர்க்க வேண்டுமென்ற கருத்தை நடைமுறைப்படுத்தவும் வாய்ப்பளித்தது. எனவே ரஷ்ய-ஜப்பானியப் போர் தவிர்க்க முடியாத ஒன்றாயிற்று.

**\6. ஆங்கில-ஜப்பானிய உடன்படிக்கை : -**

1902 ஆம் ஆண்டில் கையெழுத்தான ஆங்கில -ஜப்பானிய உடன்படிக்கையானது ரஷ்யாவுக்கெதிரானதாகவே அமைந்திருந்தது. ரஷ்யாவின் எழுச்சிகாரணமாக ஏற்பட்ட அச்சவுணர்வே இவ்வுடன் படிக்கைக்குக் காரணமாக விளங்கியதென்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும். இவ்வுடன்படிக்கை ஏற்கனவே பல காரணங்களால் பலம் பொருந்திய நிலையிலிருந்த ஜப்பானுக்கு மேலும் ஆதரவளித்தது. எவ்விதமான நண்பர்களுமில்லாத ரஷ்யாவுக்கு இவ்வுடன்படிக்கை ஒரு பலத்த அடியாகத்திகழ்ந்தது. அதனால் ஆத்திரமுற்ற ரஷ்யா, ஜப்பானை எதிர்க்கத் தலைப்பட்ட போது அது ரஷ்ய-ஜப்பானியப் போராக மலாந்தது.)

**7. ஜப்பானின் ஆதிக்கப்பெருக்கம் :**

ஒட்டகத்தின் முதுகெலும்பை முறிக்கக் கூடியதாக அமைந்த லைக்கோலென ஜப்பானில் ஏற்பட்ட மேஜி முடியாட்சி மீட்சியின் விளைவுகள் அமைந்திருந்தன. அவை ரஷ்ய-

ஜப்பானியப் போருக்கு இறுதிக்காரணமாக அமைந்திருந்தன. மேஜி முடியாட்சி மீட்கப்பட்டதால் ஜப்பான் தன்னுடைய பழைமைத் தடைகளைத் தகர்த்தெறிந்து ஆக்க பூர்வமான ஆதாரமான பல வழிகளைக் கொண்டு முன்னேறியது. அவ்வமயத்தில் தனது பொருளாதாரத்திற்குத் தடையாயிருந்த மக்கள் தொகை, உற்பத்திப் பெருக்கம் காரணமாகப் பெருகிய பொருட்களுக்கான சந்தைகளில்லாமை ஆகிய குறைகளைக் களைய வேண்டுமெனில் கொரியாவும், மஞ்சூரியாவும் தம்முடைய கட்டுப்பாட்டின்கீழ் இருத்தல் அவசியமென ஜப்பான் எண்ணியதால் ஏற்பட்ட எதிர்ப்புகள் ரஷ்ய-ஜப்பானியப் போராக உருவெடுத்தது.

**போரின் போக்கு :**

- 1904 ஆம் ஆண்டு பிப்ரவரியில் முதலில் ஜப்பான் ரஷ்யாவுடனான தூதரக உறவுகளைத் துண்டித்துக் கொண்டது. தொடர்ந்து பிப்ரவரி 8,9 ஆகிய தேதிகளில் தமது படைகளைக் கொரியாவுக்குள் அனுப்பியது. பிப்ரவரி 10ஆம் நாள் போர் அறிவிப்பு வெளியிடப்பட்டது. 1902 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த ஆங்கில -ஜப்பானிய உடன்படிக்கையின் விளைவாக ஐரோப்பிய நாடுகளின் உதவியைப் பெறுவதினின்றும் தடை செய்யப்பட்ட ரஷ்யா, ஜப்பானுடன் நேரடியாக மோதலாயிற்று. ஜப்பானியத் தளபதி உரியூ செமுல் துறைமுகம் வழியாக கொரிய தலைநகரான சியோலைக் கைப்பற்ற முயன்றார். பிறிதொரு ஜப்பானியத் தளபதியான தோகோ என்பவர் போர்ட் ஆர்தர் துறைமுகத்தைக் கைப்பற்றத் திட்டமிட்டார். 1904 பிப்ரவரி 8 ஆம் நாள் ஆர்தர் துறைமுகம் ஜப்பானியத் தாக்குதல்களுக்குட்படுத்தப்பட்டது. ரஷ்யக் கப்பற்படைத் தளபதி மக்கராப் அவர்களை எதிர்த்தார். முடிவு எதுவும் எடுக்கமுடியாத நிலை தொடர்ந்து நீடித்தது. 1904 ஏப்ரல் 13ல் ரஷ்யக் கப்பலொன்றினைத் தளபதி மூழ்கடித்தார். அதிலிருந்த தளபதி மக்ராப் மூழ்கடிக்கப்பட்டு உயிரிழந்தார். இருப்பினும் ஆர்தர் துறைமுகத்தை ஜப்பானியர் கைப்பற்ற முடியவில்லை. ஜப்பானியர் தமது கவனத்தை கொரியத் தலைநகரான சியோலின் மீது திருப்பியபோது. ஜப்பானியக் கப்பற்படையானது போர்ட் ஆர்தர், விளாடிவாஸ்டாக் ஆகியவற்றில் தனது கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தது. 1905 ஆம் ஆண்டு ஜனவரி முதல் நாள் போர்ட் ஆர்தர் வீழ்ந்தது. குரோகி (Kuroki) என்ற ஜப்பானியத் தளபதி வடகொரியாவின் முக்கியநகரான பிங்யாங் நகரைக் கைப்பற்றினார். தொடர்ந்து கிஞ்தேய், இக்கியூரி போன்ற சிறு தீவுகள் ஜப்பான் வசமாயின. பின்பு ஒசேகித்தீவு, சுகோதைத்தீவு, அண்டுங் ஆகியவை ஜப்பானின் கைகளில் வீழ்ந்தன. இவ்வாறு யாலு ஆற்றங்கரையிலிருந்த பகுதிகள் ஜப்பான் வசமான பின்பு 1905 ஆம் ஆண்டு பிப்ரவரிக்குப்பின் ஜப்பானியரின் வெற்றி உறுதியாயிற்று. 1905 பிப்ரவரி 23 ஆம் நாள் முக்டென் என்னுமிடத்தில் ஜப்பான் மற்றும் ரஷ்யப் படைகள் மோதலுற்றன. ஜப்பானிய வரலாற்றில் முக்கியமானதோர் இடத்தைப் பெற்றுள்ள இப்போரில் ரஷ்யப்படைகள் கடுமையாகத் தோற்கடிக்கப்பட்டன.) ஜப்பானியரின் பயிற்சி பெற்ற படைகளின் செயல்கள், பேராற்றல், தேசப்பற்று ஆகியவற்றால் ரஷ்யர்கள் பலத்ததோல்விகளைப் பல இடங்களிலும்

- 169 வெக்கணித்துவிட்டு ஐரோப்பிய நாடுகள் எத்தகைய செயல்களிலும் எடுபடுதலென்பது இயலாது என்ற நிலை ஏற்பட்டது. சர். பிரான்சின்லோ குறிப்பிட்டுள்ளவாறு ஆசியாவில் ஒரு பொதுமையுணர்வு ஏற்பட இப்போர் காரணமாயிருந்ததென்பதை நாம் மறக்கவியலாது. கிளைடும் பீர்சும் குறிப்பிட்டபடி தூரக்கிழக்கில் முதலீடு செய்திருந்த அமெரிக்க மதலீட்டாளர்களும் வணிகர்களும், கிழக்கில் தம்முடைய ஆதிக்கப் பெருக்கத்தை ஜப்பான் தடை செய்யுமென அச்சமுற்று போர்ட்ஸ்மவுத் உடன்படிக்கையை ஒப்புக்கொள்ள மறுத்தனர்.

இவ்வாறு ஜப்பானின் எழுச்சிக்கு இப்போரானது பேநாதரவாயிருந்ததே 'ஒருமித்த விளைவென்பதை நாம் மறந்துவிடக்கூடாது. )

**ரஷ்யாவின் தோல்விக்கான காரணங்கள்** :

1. ஜப்பான் தன் மீது போரிடக்கூடிய அபாயம் இருக்க வாய்ப்பில்லை என்ற

பெருமித உணர்வினால் ரஷ்யா போருக்குத் தயாராயிருக்கவில்லை.

2. ரஷ்யாவின் பொருளாதாரச் சிக்கல்கள் அதற்கோர் இடர்ப்பாடாக

இருந்தது.

3. பயிற்சிமிக்க, திறமை கொண்ட ஜப்பானியப் படையின் பண்புகளை

குறைத்து மதிப்பிட்ட ரஷ்யா தன்னிடம் அவ்வமயம் வலிமை மற்றும் போராற்றல் மிக்க தளபதிகள் இல்லையென்பதை மறந்துவிட்டது.

4. போர்க்களங்களுக்குத் தேவையான தளவாடங்களை போர்க்களத்திற்கு

- அனுப்புவது ரஷ்யாவுக்கு ஒரு பெருஞ் சோதனையாக இருந்தது.

\5. ரஷ்யா எதிர்பார்த்த அளவிற்கு ஐரோப்பிய நாடுகளிடம் இருந்து

எவ்விதமான ஆதரவு, உதவி ஆகியவற்றைப் பெற இயலவில்லை .

மேற்கூறப்பட்ட காரணங்களால் தோல்வி கண்ட ரஷ்யா முதல் உலகப்போரிலும் இரங்கத்தக்க ஒரு நிலையிலேயே காணப்பட்டது. அச்சமயத்தில் ஜப்பானின் வளர்ச்சி அளவிற்கரியதாய் இருந்தது. குறிப்பாக 1905-ல் கொரியாவில் காப்பரசை நிறுவிய ஜப்பான் 1910 ஆம் ஆண்டு ஆகஸ்டில் கொரியாவைத் தனது பகுதியாக இணைத்துக் கொள்ளுமளவிற்கு வளர்ச்சியுற்றதெனில் இப்போரின் விளைவினைத் தெளிவாக நாம் உணர்ந்து கொள்ளலாம்.

வினா :

1. 1904-05 ஆம் ஆண்டுகளின் ரஷிய-ஜப்பானியப் போரின்

காரணங்களையும் விளைவுகளையும் ஆய்க.

**. இருபத்தியோரு அம்சக் கோரிக்கை**

**முன்னுரை :**

“சீனாவின் பொருளியல் வளம் மற்றும் அரசியல் இறையாண்மை மது வைப்பான் எய்த அப்பட்டமான ஆக்கிரமிப்பு அம்புதான் இருபத்தியோரு அமச கோரிக்கைகள்”. இந்தக் கோரிக்கைகள்மூலம் சீனாவின் மீதான ஜப்பானின் புதிய ஏகாதிபத்திய கண்ணோட்டம் தெளிவாகத் தெரிந்தது. உள்நாட்டு குழப்பங்களாலும் யுவானின் சந்தர்ப்பவாத அரசியல் நடவடிக்கைகளாலும் உலகப்போர் தோற்றுவித்த பயங்கர சூழ்நிலைகளாலும் குழம்பிய கட்டையாகக் காட்சியளித்த சீன அரசியலில் ஜப்பான் ஆதாயம் தேடப் புறப்பட்டது. அதே சமயத்தில் ஜப்பானின் இந்த முறையற்ற கோரிக்கைகள், யுவானின் முறையற்ற திட்டங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தது குறிப்பிடத்தக்கது.

**இருபத்தியோரு கோரிக்கைகள் கொண்டு வரப்பட்ட சூழ்நிலை** :

1. யுவானின் தன்னலத் திட்டங்கள் : குடியரசு தோற்றுவிக்கப்பட்ட ஓராண்டு காலத்திற்குள்ளாகவே அந்த குடியரசை குழி தோண்டிப் புதைக்கும் தன்னலத்திட்டங்களை வகுக்கலானார். முதலில் தம் படை வலிமையைப் பெருக்க வல்லரசுகளிடமிருந்து பெருந்தொகையொன்றை கடனாகப் பெற்றார். இதனை எதிர்த்த கோமின்டாங் கட்சியைத் தடை செய்தார். தேசிய பேரவையைக் கலைத்தார். புதிய அரசியலமைப்பு ஒன்றினை வகுத்து தம்மை சட்டபூர்வமான சர்வாதிகாரியாக ஆக்கிக் கொண்டார். அதிலும் மன நிறைவு கொள்ளாது தம்மை முடிமன்னனாக்கி, புதிய அரசமரபை நிறுவத் திட்டமிட்டார்.

2. மன்னர் பதவி கனவு : இந்த முடி மன்னர் திட்டத்தை மாநிலங்கள் பல எதிர்த்தன. முதலில் யுன்னான் மாநிலத்தில் புரட்சி வெடித்தது. அதனை அடக்குவதற்கு அனுப்பப்பட்ட படை தோற்கடிக்கப்பட்டது. அடுத்து கியாங்சி ஆளுநர் புரட்சிக்கொடி தூக்கினார். எல்லைப்புற மாநிலங்களான திபெத், மங்கோலியா ஆகியவை பீகிங்குடனான உறவைத் துண்டித்து சுய ஆட்சி பெற்ற நாடுகளாயின.

3. முதல் உலகப்போர் : இவ்வாறு குழப்பங்கள் கொஞ்சம் பாஞ்சமாக சீனாவின் ஒருமைப்பாட்டை சிதைத்துக் கொண்டிருந்தபோது ராப்பாவில் முதல் உலகப்போர் வெடித்தது. கிழக்காசியாவில் பரஸ்பரம்

பொருளியல் சலுகைகளைப் பெறுமாறு தங்கள் அரசை வற்புறுத்தினர் அப்போதைய ஜப்பானின் பிரதமர் ஒகுமா (Okuma) தொழிலதிபர்களின் கெடுபிடி காரணமாக இருபத்தியோரு அம்ச கோரிக்கையை தயாரித்து 1915 ஜனவரியில் சீன குடியரசுத் தலைவர் யுவான் ஷி கேயிடம் இரகசியமாக சமர்ப்பித்தார்.

**அக்கோரிக்கைகளாவன**, .

ஷாண்டுங்கில் ஜெர்மன் அனுபவித்த அனைத்து உரிமைகளும்

சலுகைகளும் ஜப்பானுக்கு வழங்கப்படவேண்டும்.

-

**சீனாவும் முதல் உலகப்போரும்**

**முன்னுரை** :

முதல் உலகப்போரின் அடிப்படைக் காரணங்களுக்கும் சீனாவிற்கும் எந்தவித தொடர்புமில்லை . ஐரோப்பிய வல்லரசுகள் பரஸ்பரம், போட்டி, பொறாமை, பகைமை காரணமாக மூவர் கூட்டு (Triple Alliance) மூவா நட்புறவு (Triple Ententc) என்ற இரு இராணுவ முகாம்களாக பிரிந்து நின்றன. போலிவோவில் வெடித்த துப்பாக்கி குண்டு வெடிமருந்து கிடங்கில் விழுந்த நெருப்பு பொறியானது ஐரோப்பாவில் 1914ல் போராக மூண்டது. அந்த ஐரோப்பிய வல்லரசுகள் தொலை தூரத்திலுள்ள கண்டத்தில் வாழ்வா, சாவா என்ற கடுமையான போராட்டத்தில் ஈடுபட்டிருந்தன. எனவே அவற்றின் நிர்ப்பந்த நெருக்கங்களிலிருந்து சீனா தற்காலிகமாக விடுதலை பெற்றதுபோல் தோன்றியது. ஆனால் தூரக்கிழக்கின் வல்லரசான ஜப்பான் இந்த சூழ்நிலையைப் பயன்படுத்தி சீனாவின் மீது தன்

ஆதிக்கத்தை நிலைநாட்டத் திட்டமிட்டது. தனியே விடப்பட்ட சீனா ஜப்பானின் ராஜதந்திர தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறியது.

**(நடுநிலைப் பிரகடனம்** : -

போர் தொடங்கியதும் குடியரசுத் தலைவர் யுவான் ஷி கே சீனாவின் நடுநிலையைப் பிரகடனம் செய்தார். தம் நடுநிலையை கௌரவிக்குமாறு ஐரோப்பிய வல்லரசுகளுக்கு வேண்டுகோள் விடுத்தார். ஜெர்மனி தவிர பிற வல்லரசுகள் அதற்கு சாதகமான பதில் தரவில்லை

. **ஜப்பானின் ஆக்கிரமிப்புகள்** : -

தூரக்கிழக்கில் தான் என்ன செய்தாலும் அதனைத் தட்டிக்கேட்க எவருமில்லை என்ற இறுமாப்பில் ஜப்பான் செயல்படத் தொடங்கியது. சீனாவில் ஜெர்மனிக்கு உரிய குத்தகைப் பகுதிகள் செல்வாக்கு மண்டலம் மற்றும் பசிபிக் கடலில் ஜெர்மனிக்குச் சொந்தமான தீவுகள் (மாரியானம், கரோலின் தீவுகள், மார்ஷல் தீவுகள்) ஆகியவற்றை ஆக்கிரமித்துக் கொள்ள இதுவே தக்க தருணம் என எண்ணியது. எனவே ஜப்பான் மூவர் நட்புறவு நாடுகளுக்கு (பிரிட்டன், பிரான்ஸ், ரஷியா) ஆதரவாக ஜெர்மனிக்கு எதிராகப் போரிலிறங்கியது. ஜப்பானின் நோக்கத்தைப் புரிந்து கொண்ட ஜெர்மனி தனது குத்தகை துறைமுகமான கியாவோ மற்றும் ஷாண்டுங் பகுதியில் உள்ள சலுகைகளை சீனாவிற்கு விட்டுக்கொடுக்க முன்வந்தது. ஆனால் அதனைப் பொருட்படுத்தாது ஜப்பான் அவற்றைக் கைப்பற்றிக் கொண்டது. அவ்வாறு கைப்பற்றுவதற்கு தன் படைகளை எவ்வித அனுமதியுமின்றி பன்னாட்டு 204 17 நியதிகளுக்கு மாறாக சீனப்பகுதி வழியாக நடத்திச் சென்றது. இது உண்மையான இழப்பு ஜெர்மனிக்கல்ல, சீனாவிற்குத்தான். ஏனென்

ஜப்பான் கைப்பற்றிய பகுதிகள் சீனாவின் ஒருங்கிணைந்த பகுதிகளான தனது எதிர்ப்பைத் தெரிவித்துக் கொண்டதைத் தவிர சீனாவால் எச செய்ய இயலவில்லை .

**(இருபத்தியோரு அம்ச கோரிக்கை** :

இத்துடன் நில்லாது ஜப்பான் சீனாவின் மீது தன் மேலாதிக்கக் நிலைநாட்டும் நோக்குடன் இருபத்தியோரு அம்ச கோரிக்கையைத் தயாரிக்க அதனை ஏற்குமாறு யுவானை நிர்ப்பந்தித்தது. முடிமன்னர் பதவி கனவுலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்த யுவான் ஷி கேயால் அதனை நிராகரிக்கவும் முடியவில்லை. ஏற்றுக்கொள்ளவும் இயலவில்லை. இறுதியில் பலவற்றை ஏற்றுக்கொண்டு சிலவற்றிற்கான முடிவை தள்ளிவைத்தார். இந்நிலையில் அவர் மரணமடைந்தார்.)

**போரிலிறங்குதல்** :

இதுவரை நடுநிலை வகித்த அமெரிக்கா 1917ல் போரிலிறங்கியது. தன்னைப் பின்பற்றி சீனாவும் போரிலிறங்க வேண்டுமென்று அறிவுறுத்தியது. அப்போது போரிலிறங்கினால் போருக்குப்பின் கூட்டப்படும் அமைதி மாநாட்டில் சீனா பங்கு பெறலாம் என்றும், அம்மாநாட்டில் சீனா தனது மனக்குறைகளைத் தெரிவிக்கலாம் என்றும் ஆசை காட்டப்பட்டது. உருப்படியான முடிவு எடுக்கும் உறுதியான தலைமை இப்போது சீனாவில் - இல்லை .) (யுவான் ஷி கே. இறந்ததும் லி யுவான் ஹங் குடியரசுத் தலைவரானார். துவான்

சி ஜுய் (Tuan Chi-Jui) என்ற படைத்தலைவர் பிரமராயிருந்தார். அவர் பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு ஆதரவாகப் போரிலிறங்கினால் அந்நாடுகளிடமிருந்து பண உதவி பெற்று தம் படை வலிமையை பெருக்கிக் கொண்டு பதவியையும் தக்க வைத்துக் கொள்ளலாம் என எதிர்பார்த்தார்.

ஆனால் சீன பொதுமக்கள் கருத்து ஜெர்மனிக்கு ஆதரவாக இருந்ததோ இல்லையோ பிரிட்டன், பிரான்சுக்கு ஆதரவாக இல்லவே இல்லை. இச்சூழ்நிலையில், மத்தியதரைக்கடலில் சென்று கொண்டிருந்த "அதோஸ்" என்ற கப்பலை ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்கள் தாக்கி அழித்தன. அதில் பயணம் செய்த 543 சீனக்கூலிகள் உயிரிழந்தனர். இதனைக் காரணம் காட்டி பிரதமர் துவான், குரயரசுத் தலைவரையோ, பாராளுமன்றத்தையோ கலந்து கொள்ளாது 1917 மார்ச் 14ல் ஜெர்மனிக்கெதிராக போரிலிறங்கியிருப்பதாக அறிவித்தார். இதனால் போர் பிரபுக்களிடை கருத்து வேறுபாடு ஏற்பட்டு மோதல்களும் நிகழ்ந்தன. இறுதியில் போரிலிறங்கியது ஏற்றுக்கொள்ளப்பட்டது

**போரில் சீனாவின் பங்கு**

போரில் சீனா குறிப்பிடத்தக்க பங்கு பெறவில்லை. எஜமானர்கள் போரில் அவர்களது அடிமைகளுக்கு என்ன பணியோ அந்தப் பணியைத்தான் சீனா புரிந்தது. படைவீரர்களுக்கு பதுங்கு குழி வெட்டுதல், இறந்த போர்வீரர்கள் பிணங்களைப் புதைத்தல் போன்ற தொண்டுகள் பரிந்தனர். பிரான்ஸ், மெசபொடோமியா, ஆப்பிரிக்க பகுதிகளுக்கு சீன தொழிலாளர் படை அனுப்பப்பட்டது. மொத்தம் ஒரு லட்சத்து அம்பதினாயிரம் சீனர்கள் படைப்பணியில் ஈடுபட்டனர். போரின் இறுதிக கட்டத்தில்தான் சீனப்போர் வீரர்கள் போர்முனைக்கு அனுப்பப்பட்டனர்.

**(போரிலிறங்கியதன் விளைவு** :

- சீனா மிகப்பெரிய எதிர்பார்ப்புகளுடன் போரிலிறங்கியது. ஜெர்மன், ஆஸ்திரியாவிற்கு இன்னமும் கொடுக்கப்பட வேண்டிய பாக்சர் இழப்பீடுகள் தள்ளுபடி செய்யப்படும். இறக்குமதி, ஏற்றுமதி வரிவிதிப்பில் முழு சுதந்திரம் வழங்கப்படும். சீன மண்ணில் நிறுத்தப்பட்டுள்ள அன்னியப் படைகள் வெளியேற்றப்படும். ஆஸ்திரிய ஜெர்மன் சலுகைப் பகுதிகள் சீனாவிற்கு மீண்டும் கொடுக்கப்படும் என்றெல்லாம் எதிர்பார்த்தது.

இந்த எதிர்பார்ப்புகளில் பல நிறைவேறின. இவைகளுடன் வேறு சில ஆதாயங்களையும் சீனா பெற்றது.

(நேச நாடுகளின் கட்டுப்பாட்டிலுள்ள ரஷிய மஞ்சூரிய இருப்புப் பாதையில் சீனாவிற்கு ஒரு பங்கு அளிக்கப்பட்டது.

இரண்டாவதாக, போருக்குப்பின் கூட்டப்படும் வெர்சேல்ஸ் அமைதி மாநாட்டில் சீனா பங்கு பெறும் வாய்ப்பினையும் பெற்றது.

**அமைதி மாநாட்டில் சீனா** :)

வெல்சேல்ஸ் அமைதி மாநாட்டிலும் மிகுந்த எதிர்பார்ப்புகளுடன் சீனா கலந்து கொண்டது. ஷாண்டுங் தீபகற்பத்திலுள்ள ஜெர்மன் சலுகைகள் மீண்டும் தன்னிடம் ஒப்படைக்கப்படும் என்றும், சீனாவிலுள்ள வெளியார் படைகள் வெளியேற்றப்படும் என்றும், செல்வாக்கு மண்டலங்கள் அகற்றப்படும் என்றும் எதிர்பார்த்தது.

ஆனால் மாநாட்டில் சீனாவின் நிலை அவ்வளவு வலுவாக இல்லை. ஏனென்றால்,

i) (சீனாவிலிருந்து இரண்டு தூதுக்குழுக்கள், ஒன்று பீகிங் அரசு சார்பிலும் மற்றொன்று காண்டன் அரசு சார்பிலும் வந்திருந்தன. இதில் அதிகாரபூர்வமான தூதுக்குழு எது என்ற நியாயமான சந்தேகம் எழுந்தது.

ii) ஜப்பான் வல்லரசு அந்தஸ்திற்கு உயர்த்தப்பட்டிருந்தது. ஏற்கனவே

ஜப்பான் இங்கிலாந்துடன் நட்பு உடன்படிக்கை செய்திருந்தது. போர்க் காலத்தில் பல ஐரோப்பிய வல்லரசுகள் தூரக்கிழக்கில் ஜப்பானின் நிலையை ஆதரித்து இரகசிய உடன்படிக்கை செய்திருந்தன.

iii) எல்லாவற்றிற்கும் மேலாக இதுவரை சீனாவை மேலோட்டமாக

ஆதரித்த அமெரிக்காவும் 1917-ல் ஜப்பானுடன் லான்ஷிங்-இஷி ஒப்பந்தம் செய்து கொண்டு சீனாவில் ஜப்பானுக்குள்ள சிறப்பு நிலையைஅங்கீகரித்திருந்தது.

iv) சீனாவின் கோரிக்கைகளுக்கு இணங்கினால் அங்கு தாங்கள் பெற்ற வணிகச் சலுகைகள் அகற்றப்பட்டுவிடும் என ஐரோப்பிய வல்லரசுகள் சந்தேகித்தன.)

எனவே அமைதி மாநாட்டில் சீனாவின் கோரிக்கைகளுக்கு இணங்க முடியாதென முகத்திலறைந்தாற்போல் பதிலளிக்கப்பட்டது. (

**விளைவு** :

இதனால் சீனாவில் பெருங்கொந்தளிப்பு ஏற்பட்டது. தங்களின் நியாயமான கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டது கண்டு சீனர்கள் ஆத்திரமடைந்தனர். முதன் முதலாக சீனர்கள் தங்கள் கருத்து வேறுபாடுகளை மறந்து தேசிய உணர்வால் உந்தப்பட்டு கிளர்ந்தெழுந்தனர். இதில் பீகிங் பல்கலைக்கழக மாணவர்கள் முன்னணியில் நின்றனர். அவர்கள் வகுப்புகளைப் புறக்கணித்துவிட்டு வெளியேறினர். ஐரோப்பிய வல்லரசுகளுக்கு எதிராக தானாக பீறிட்டுக்கிளம்பிய இந்த ஆவேச உணர்வு ஜப்பானிய எதிர்ப்பு இயல்பாக மாறியது. ஜப்பானியப் பொருட்கள், ஆலைகள் புறக்கணிக்கப்பட்டன. இதுவே “மே நான்காம் நாள் இயக்கமென" வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெர்சேல்ஸ் மாநாட்டை விட்டு சீனா வெளியேறி ஜெர்மனியுடன் , தனியாக அமைதி ஒப்பந்தம் செய்து கொண்டது. சமத்துவ நிலையில் செய்து கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தத்தின் மூலம் ஜெர்மனி சீனாவில் தான் பெற்ற பிரதேசங்களையும் சலுகைகளையும் மீண்டும் சீனாவிற்கே வழங்கியது.

வினா :

1. முதல் உலகப்போரில் சீனா ஏன் இறங்கியது? அப்போரில்

அதற்கான காரணங்கள் :

. **மஞ்சூரியச் சிக்கல்**

**முன்னுரை** :

மெய்ஜி புரட்சி ஜப்பானை ஒரு நவீன நாடாக மாற்றியது என்றால் 1905 ரஷிய ஜப்பானியப் போர் அந்நாட்டை ஒரு வல்லரசாக உயர்த்தியது. வல்லரசுகளுக்குரிய ஆக்கிரமிப்பு

மனோபாவம், பொருளாதார ஏகாதிபத்தியம் ஆகிய பண்பு நலன்களும் கூடவே வளர்ச்சியுற்றன. "கிழக்கத்திய பிரிட்டன்' எனப் பெருமை பெற்ற அந்நாடு கிழக்கில் பிரிட்டனைப் போல ஒரு பேரரசை நிறுவத் திட்டமிட்டு முயற்சியில் ஈடுபட்டது.

1895-ல் சீனாவைத் தோற்கடித்து பர்மோசாத் தீவைப் பெற்றதோடு பல வாணிபச் சலுகைகளையும் பெற்றது.

1902-ல் இங்கிலாந்தோடு ஓர் உடன்படிக்கை செய்து கொண்டு தன் அந்தஸ்தை உயர்த்திக் கொண்டதோடு ஆக்கிரமிப்பிற்கு ஊக்கமும் பெற்றது.

- 1902-ல் ரஷியாவைத் தோற்கடித்து தெற்கு சகாலின் தீவு, லியாடுங் தீபகற்பம் ஆகியவற்றைப் பெற்றது. தெற்கு மஞ்சூரியாவை தன் செல்வாக்கு மண்டலமாக ஆக்கிக் கொண்டது.

- 1910-ல் கொரியாவை இணைத்துக் கொண்டது.

**- முதல் உலகப் போரும் ஜப்பானும்** :

முதல் உலகப்போர் காரணமாக வல்லரசுகள் ஐரோப்பாக் கண்டத்தில் கடுமையான போரில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததால் கிழக்கு ஆசியாவில் ஜப்பான் எவ்வித எதிர்ப்புமின்றி தன் ஆதிக்க விஸ்தரிப்பைச் செய்யத் துணிந்தது. முதலில் ஜெர்மனிக்கு விரோதமாகப் போரிலிறங்கியது. சீனாவில் ஜெர்மன் செல்வாக்கு மண்டலமான ஷாண்டுங் தீபகற்பத்தையும் அங்குள்ள குத்தகை துறைமுகமான கியாவோசௌ என்ற துறைமுகத்தையும் கைப்பற்றிக் கொண்டது. பசிபிக் பெருங்கடலில் ஜெர்மனிக்கு சொந்தமான மரியன் கரோலின், மார்ஷல் ஆகிய தீவுகளையும் எடுத்துக்கொண்டது. - இரண்டாவதாக, சீனாவில் தன் மேலாதிக்கத்தை நிலைநாட்டும் நோக்குடன் இருபத்தியோரு கோரிக்கைகளை (Tiventy One Demands) தயாரித்து அதனை ஏற்றுக் கொள்ளுமாறு சீனாவை நிர்ப்பந்தித்தது. வேறு வழியின்றி சீனர் அவற்றுள் பெரும்பாலானவற்றை ஏற்றுக்கொண்டது

மூன்றாவதாக, இதுவரை கிழக்காசியாவில் ஜப்பானின் ஆதிக்க விரிவாக்கத்தை கடுமையாக எதிர்த்து வந்த அமெரிக்கா கூட போர்க்கால நெருக்கடி காரணமாக சீனாவில் ஜப்பானுக்குரிய சிறப்பு அந்தஸ்தை ஏற்றுக்கொள்ள நேர்ந்தது.

இறுதியாக, போருக்குப் பின் நடைபெற்ற வெர்சேல்ஸ் மாநாட்டிலும் ஜப்பான் வல்லரசுக்குரிய செல்வாக்கோடு திகழ்ந்தது. அதன் மூலம் சீனாவின் வேண்டுகோள்கள் புறக்கணிக்கப்பட்டன. பன்னாட்டுக் கழகத்தில் ஜப்பானுக்கு வல்லரசு அந்தஸ்து அளிக்கப்பட்டது.)

**வாஷிங்டன் மாநாடு (1922) :**

கிழக்காசியாவில் கப்பற்படைப் பெருக்கப் போட்டியைத் தவிர்க்கும் பொருட்டு பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, இத்தாலி, ஜப்பான் ஆகிய வல்லரசுகள் மாநாடு கூட்டப்பட்டது. அதில் அமெரிக்கர் மற்றும் பிரிட்டனுக்கு அடுத்தபடியாக கப்பற்படை வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டது. சீனாவுடன் செய்து கொண்ட தனி ஒப்பந்தத்தின்படி ஷாண்டுங் தீபகற்ப உரிமையை சீனாவிற்கு விட்டுக்கொடுத்தது. -

**தனாக்கா அரசிதழ் (Tanako Memorials) :**

வாஷிங்டன் மாநாட்டிற்குப்பின் ஜப்பான் ஆக்கிரமிப்புகளில் ஈடுபடவில்லை. அதனால் அக்கொள்கையைக் கைவிட்டதாகக் கொள்ளக்கூடாது. தனாக்கா என்ற ஜப்பானியப் பிரதமர் ஜப்பானின் எதிர்கால கொள்கைப்பற்றி ஒரு அறிக்கை தயாரித்தார். அதில் மஞ்சூரியா, மங்கோலியா ஆகியவை ஜப்பானின் பாதுகாப்பிற்கும் வளர்ச்சிக்கும் தேவையானவை என்று குறிப்பிட்டிருந்தது. அதனையொட்டி "ஜப்பானிய மன்றோ கொள்கை" எனப்படும் ஒரு ஆதிக்க விஸ்தரிப்பு திட்டமும் 1934-ல் வெளியிடப்பட்டது. அது சீனா உட்பட கிழக்காசியா முழுவதும் ஜப்பானின் செல்வாக்கு மண்டலம், எனவே அங்கு ஐரோப்பிய வல்லரசுகள் தலையிடக்கூடாது என வலியுறுத்தியது. இக்கொள்கையை செயல்படுத்தும் வகையில் மஞ்சூரியாவில் ஜப்பான் ஊடுருவல் செய்தது.

**மஞ்சூரியச் சிக்கல்** :

மஞ்சூரியா சீனாவின் வடகிழக்கு மாநிலமாகும். இங்கு ஏற்கனவே என் இருப்புப்பாதை அமைக்கும் உரிமை பெற்றிருந்தது. படிப்படியாக தன பொருளாதார ஆதிக்கத்தை அங்கு விரிவாக்கிக் கொண்டிருந்தது.. பதயாக தன் அரசியல் ஆதிக்கத்தையும் நிலைநாட்டத் திட்டமிட்டது

1) மஞ்சூரியா பல நிலக்கரி, இரும்புச் சுரங்கங்களைக் கொண்டிருந்தது வளர்ந்து வரும் ஜப்பானியர் ஆலைத் தொழிலுக்கு அவை இன்றியமையா மூலப் பொருட்களாகும்.

2) பெருகிவரும் மக்கள் தொகையைக் குடியமர்த்துவதற்கு மஞ்சூரியாதகுந்ததோர் இடமாகக் கருதப்பட்டது.

3) 1930-ல் உலகெங்கும் பரவிய பெருமந்தம் காரணமாக நாடுகளில் கடும் பொருளாதார நெருக்கடி தோன்றியது. ஐரோப்பிய வல்லரசுகள் அதனைச் சமாளிக்க முடியாது திணறின. அந்த நெருக்கடியால் ஜப்பான் பொருளாதாரமும் பாதிக்கப்பட்டது. அரசியலில் குழப்பம் ஏற்பட்டது. பொருளாதாரத்தை சீர்படுத்துவதற்கும், அவதியுறும் மக்களின் கவனத்தைத் திருப்புவதற்கும் மஞ்சூரியாவை ஆக்கிரமித்தல் அத்தியாவசியமாயிற்று.. -

4) ஜப்பான் அரசியலில் ராணுவத்தின் செல்வாக்கு அதிகரித்தது. ராணுவத் தளபதிகள் அரசியல் தலைவர்களை நிர்ப்பந்திக்கத் தொடங்கினர். ராணுவத்தினர் அரசியல் தலைவர்களைப் படுகொலை செய்து ஆட்சியைக் கைப்பற்ற சதிசெய்தனர். ராணுவத்தின் கெடுபிடி நடவடிக்கைகள் மஞ்சூரியா ஆக்கிரமிப்பிற்கு வழி வகுத்தது. )

**ஆக்கிரமிப்பின் தொடக்கம்** :

1931 செப்டம்பரில் முக்டன் நகருக்கு அருகில் ஜப்பானுக்குச் சொந்தமான இருப்புப்பாதை வெடிவைத்து தகர்க்கப்பட்டது. ஆக்கிரமிப்பு செய்வதற்கு சாக்கு போக்கு கிடைக்காதா என்று தேடியலைந்த ஜப்பானிய ராணுவத்தினருக்கு இது ஒரு வாய்ப்பாக அமைந்தது. தங்கள் இருப்புப்பாதை உடைமைகளைப் பாதுகாப்பதற்கு படைகளை அனுப்பியது. அந்தப் படைகள் முக்டன் உட்பட முக்கிய நகரங்களைக் கைப்பற்றின. போர்ப்பிரகடனம் செய்யாமல் பாதுகாப்பு நடவடிக்கை என்ற பெயரில் ஆக்கிரமிப்பை தொடர்ந்து நடத்தினர். ஜப்பானியர் இதனைப் போர் என்றோ ஆக்கிரமிப்பு என்றோ கூறாது "மஞ்சூரிய நிகழ்ச்சி" என்றே குறிப்பிட்டனர்.

**பன்னாட்டுக்கழக நடவடிக்கை** :

உடனே சீனா பன்னாட்டுக்கழக கவுன்சிலில் முறையிட்டது. தன் வடகிழக்கு மாநிலமான மஞ்சூரியாவில் ஜப்பான் புரிந்த ஆக்கிரமிப்பை அகற்ற உதவுமாறு கோரியது. கவுன்சிலில் எந்த ஒரு தீர்மானமும் ஏகமனதாகத்தான் நிறைவேற்ற வேண்டும். அக்கவுன்சிலில் ஜப்பான் ஒரு உறுப்பினராக இருந்ததால் அதனை எதிர்த்தோ கண்டித்தோ எந்தவித தீர்மானமும் இயற்ற முடியவில்லை .

“கூட்டுப்பாதுகாப்பு” (Collective Security) கொள்கைப்படி கழக உறுப்பு நாடுகள் ஆக்கிரமிப்பு செய்த நாட்டின் மீது “பொருளாதார முற்றுகை” போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். அப்போது உலகில் கடுமையான பொருளியல்+ நெருக்கடி நிலவியதால் பொருளாதார முற்றுகையை வல்லரசுகள் விரும்பவில்லை. ஜப்பானின் ஆக்கிரமிப்பை அகற்ற எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை .

**லிட்டன் குழு :**

மஞ்சூரியா சிக்கல் சம்பந்தப்பட்ட விஷயங்களை நேரில் சென்று ஆராய்ந்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்ய லிட்டன் என்பார் தலைமையில் ஐந்து நாடுகளின் பிரதிநிதிகளடங்கிய குழு நியமிக்கப்பட்டது. அக்குழு சீனாவிற்குச் சென்று நிலையை ஆராய்ந்து அறிக்கை தயாரித்தது. அந்த அறிக்கை ஜப்பான் ஆக்கிரமிப்பை தாஜா செய்வதாகவே இருந்தது. ஜப்பான் ஆக்கிரமிப்பு செய்தது என்று நேரடியாக கூறாது பூசிமெழுகியது.

**மஞ்சூரியா ஆக்கிரமிப்பின் முடிவு :**

லிட்டன் குழு அறிக்கை தயாரித்துக் கொண்டிருந்த 11 மாதங்களில் ஜப்பான் மஞ்சூரியா முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டது. பின் - - அதனை "மஞ்சுகோ” என்ற சுதந்திர நாடாக அறிவித்தது. சீனாவின் கடைசி மஞ்சுப் பேரரசரான பூ யீ என்பாரை அதன் மன்னனாக்கியது. ஆனால் உண்மையில் மஞ்சுகோ ஜப்பானின் பொம்மை அரசாகவே விளங்கியது. அந்நாட்டை உறுப்பினர்கள் அங்கீகரிக்கக் கூடாதென பன்னாட்டுக்கழகம் அறிவித்தது. எனவே ஜப்பான் அக்கழகத்திலிருந்து விலகியது. மஞ்சூரிய சிக்கலின் முக்கியத்துவம் : -

முதல் உலகப் போருக்குப் பின் பன்னாட்டரசியல் உறவில் பெரும் நெருக்கடியைத் தோற்றுவித்தது. மஞ்சூரிய சிக்கலாகும். வெளிப்படையான * இந்த ஆக்கிரமிப்பிற்கு எதிராக பன்னாட்டுக் கழகம் உறுதியான நடவடிக்கை எடுக்காதது அதன் மீதுள்ள நம்பிக்கையைப் போக்கடித்தது. “கூட்டுப் பாதுகாப்பு” முறையை சோதனை செய்து பார்க்கும் நல்லதொரு வாய்ப்பை கழகம் நழுவவிட்டுவிட்டது. அதே போல் வல்லரசுகளான பிரான்சும் பிரிட்டனும் நழுவல் கொள்கையைத்தான் கடைப்பிடித்தன. உலக அமைதியை நிலை நாட்டுவதற்கான பொறுப்பினை ஏற்க மறுத்தன. எந்தவொரு நாடும் துணிந்து ஆக்கிரமிப்பில் ஈடுபட்டால் அதனை எதிர்க்க எந்தவொரு சக்தியும் இல்லை என்ற நிலை ஏற்பட்டது. இது ஆக்கிரமிப்பளர்களுக்கு உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அளித்தது.

**மஞ்சூரிய சிக்கலின் விளைவு :**

மஞ்சூரிய ஆக்கிரமிப்பினால் ஊக்கமடைந்த ஜப்பான் மேலும் சீனாவில் ஆக்கிரமிப்பு செய்ய திட்டமிட்டது. அதனால் ஜேஹோல் என்ற மாநிலத்தையும் கைப்பற்றியது. இதனை தடுக்க இயலா சீன அரசு 1933ல் டாங்கு என்ற இடத்தில் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்து கொண்டது. எனினும் 1937ல் மார்கோபோலோ பாலம் அருகே சீனப்படைகளுக்கும் ஜப்பானியருக்குமிடையில் நடைபெற்ற மோதலைத் தொடர்ந்து சீனாவின் கரையோர

மாநிலங்கள் அனைத்தையும் கைப்பற்றியது. இந்தப் "பிரகடனம் செய்யா போர்" 1941ல் இரண்டாம் உலகப் போரோடு இணைந்தது.

வினா :

1. 1931ஆம் ஆண்டு மஞ்சூரிய சிக்கல் என்றால் என்ன?

அது சீன வரலாற்றில் விளைவித்த பாதிப்புகள் யாவை?

**இரண்டாம் சீன-ஜப்பானியப் போரும் (1937-194)**

**- இரண்டாம் உலகப்போரும் 1939-45**

**முன்னுரை :**

1931-ல் ஜப்பான், மஞ்சூரிய ஆக்கிரமிப்பை வெற்றிகரமாக நடத்திய பின் சீனாவையே விழுங்கிவிட திட்டமிட்ட முயற்சியில் ஈடுபட்டது. அதன் இறுதிக்கட்டமாக 1937-ல் முறையான போர் பிரகடமின்றியே சீனாமீது முறையற்ற தாக்குதலைத் தொடங்கியது. 1937-ல் தொடங்கிய இப்போர் 1941 வரை சீன-ஜப்பானியப் போராக நடைபெற்றது. மேற்கத்திய வல்லரசுகள் ஜப்பானிய ஆக்கிரமிப்பை கண்டித்து சீனாவின் மீது அனுதாபம் காட்டினாலும் படை உதவி செய்ய முன்வரவில்லை. 1939-ல் ஐரோப்பாவில் இரண்டாம் உலகப் போர் தொடங்கிவிட்டதால் அவை அப்போரில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தன. 1941 டிசம்பர் 6-ல் ஜப்பான் பேர்ல் துறைமுகத்தைத் தாக்கியதன் மூலம் இரண்டாம் உலகப் போர் கிழக்காசியாவிற்கும் விரிவாக்கம் செய்யப்பட்டது. இதனால் நேசநாடுகள் சீனாவை தங்கள் அணியில் சேர்த்துக் கொண்டு ஜப்பானுக்கெதிராக சீனாவிற்கு உதவிபுரிந்தன.) ஆனால் அவை ஐரோப்பாவில் நாஸி ஜெர்மனிக்கெதிராக "வாழ்வா, சாவா" போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததால் சீனாவிற்குப் போதிய உதவி செய்ய இயலவில்லை. எனினும் இறுதியில் அச்சு நாடுகள் படுதோல்வியுற்றன. நேச நாடுகளின் (இந்த வெற்றி சீனாவின் வெற்றியாகவும் இருந்தது.)

**காரணங்கள் : |**

- இந்த இரண்டாம் சீன-ஜப்பானியப் போர் மூளுவதற்கு சீனாவும் பெருமளவில் காரணமாயிருந்தது.

i) சீனாவின் வலுவற்ற தன்மையும், கோமின்டாங்களுக்கும் கம்யூனிஸ்டுகளுக்குமிடையில் மூண்டு கொண்டிருந்த சச்சரவு, ஜப்பானுக்கு ஆக்கிரமிப்பு ஆசையை தூண்டியது. -

ii) சியாங் கே ஷேக்கின் போக்கும் ஜப்பானியர்களுக்கு சாதகமாகஇருந்தது. அவர் ஜப்பானிய ஆக்கிரமிப்பை அகற்றுவதை விட கம்யூனிஸ்டுகளை ஒடுக்குவதற்கே முக்கியத்துவமளித்தார். அவர் கருத்துப்படி ஜப்பானிய ஆக்கிரமிப்பு உடலில் வெளிப்படையாகக்காணப்படும் காயம். ஆனால் கம்யூனிஸ்டுகளின் நடவடிக்கைகளோ இதயத்தை ஊடுருவிய நோய் போன்றது.

iii) மேலும் ஜப்பானியர்களை "தாஜா" (Appease) செய்வதன் மூலம் அவர்களை திருப்தி செய்துவிடலாம் என சியாங் தப்புக் கணக்கு போட்டார். அதன் காரணமாக ஜப்பானியர்களுடன்

1933-ல் டாங்கு போர் நிறுத்த ஒப்பந்தம் செய்து கொண்டார். இது ஜப்பானின் மஞ்சூரிய ஆக்கிரமிப்பிற்கு மறைமுக அங்கீகாரமளித்தது போலிருந்தது.

இரண்டாவதாக, ஜப்பானை ஆக்கிரமிப்பு போரில் ஈடுபடச் செய்வதற்கு வேறு சில காரணங்களும் இருந்தன. அவை

i) வெற்றிகரமான மஞ்சூரிய ஆக்கிரமிப்பு அளித்த ஊக்கம்

|ii) ஐரோப்பிய ஆக்கிரமிப்பாளர்களை நாஸி ஜெர்மனி, பாசீச இத்தாலியோடு பெர்லின், ரோம். டோக்கியோ 264அச்சு அமைத்த உற்சாகம். -

iii) பன்னாட்டுக் கழகத்தின் பலவீனம்

மூன்றாவதாக, தீவிர சீன தேசியவாதிகளின் செயல்கள் ஜப்பானுக்கு தொல்லையளித்தன. அவை

i) குவாங்டுங் மாநிலத்தில் ஒரு ஜப்பானிய மருத்துவர் கொல்லப்பட்டது.

ii) ஹாங்கௌவிலுள்ள ஜப்பானிய தூதரக காவலர் கொல்லப்பட்டது.

iii) ஷாங்கை பன்னாட்டு குடியிருப்பில் சில ஜப்பானிய மாலுமிகளை

சுட்டுக்கொன்றது.

iv) சீனாவில் தேசியவாதிகளின் தீவிர ஜப்பானிய எதிர்ப்பு பிரச்சாரமும்,

ஆர்ப்பாட்டமும், ஜப்பானியப் பொருட்கள் புறக்கணிக்கப்படுதலும், * - சொத்துக்கள் நாசமாக்கப்படுதலும். எனவே, ஜப்பான் பல மறைமுக ஆக்கிரமிப்புகளை தொடர்ச்சியாக நிகழ்த்திக் கொண்டிருந்தது. அவை,

i) மஞ்சூரியாவை மஞ்சுகோ என்ற சுதந்திர நாடாக்கி அங்கு பு-யி தலைமையில் ஒரு பொம்மை அரசை நிறுவுதல்.

ii) 1933-ல் ஜெஹோல் மாநிலத்தைக் கைப்பற்றியது.

iii) 1935 இறுதிக்குள் உள் மங்கோலியப் பகுதிகளை தன் ஆதிக்கத்தினுள் கொண்டுவருதல்.

265 2

iv) வட சீனமாநிலங்களான ஹோப்பே, சாஹார். சூயான் ஷென்ஷி,

ஷாண்டுங் ஆகியவற்றை படிப்படியாக தன் மேலாதிக்கத்தினுள் கொண்டுவருதல்.

v) 1934 "ஜப்பானிய மன்றோ கொள்கை" எனப்பட்ட அறிக்கையை வெளியிட்டு வெளியார் சீனாவில் தலையிடுவதை எதிர்க்கும் என

எச்சரித்தது.

vi) ஜப்பானில் குறுகிய நாட்டுப்பற்றும் போர் வெறியும் கொண்ட கட்சியினர்

அரசியலில் செல்வாக்கு பெறுதல்.

நான்காவதாக, ஜப்பானின் இந்த ஆக்கிரமிப்பு கண்டு அஞ்சிய சீன மக்கள தங்கள் கருத்து வேற்றுமைகளை தற்காலிகமாக மறந்து குறிப்பாக கோமின்டாங், கம்யூனிஸ்ட் கட்சியினர்

தேசிய ஐக்கிய முன்னணி அமைத்தது கண்டு ஜப்பான் திகைத்தது. சீனர்கள் ஒன்றுபடுவதற்கு முன் அவர்களை ஆக்கிரமிக்க ஜப்பான் முனைந்தது.

**உடனடிக் காரணம் :**

இந்நிலையில் ஜப்பான், சீனா மீது தன் ஆக்கிரமிப்பை தொடங்க ஒரு சாக்குபோக்கைத் தேடிக்கொண்டிருந்தது. 1937 ஜூலை 7-ல் லுகெளசியோ அல்லது மார்க்கோபோலோ பாலம் அருகில் நடைபெற்ற நிகழ்ச்சி நல்லதொரு சாக்குப்போக்காக அமைந்தது. அன்றிரவில் ஒரு ஜப்பானிய வீரரைக்காணவில்லை; அருகில் சீன கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில் உட்புகுந்து தேடப்போகிறோம் என ஜப்பானிய வீரர்கள் கூறியதை சீன போர் வீரர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. உடனே ஜப்பானிய பீரங்கிகள் முழங்கின. போர் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன.)

**போரின் போக்கு :**

பீகிங் வீழ்ச்சி : போர் தொடங்கியதும் சீனர்கள் அனைவரும் கம்யூனிஸ்டுகள் உட்பட கட்சி வேறுபாடின்றி சியாங்கே ஷேக் தலைமையின் கீழ் அணிதிரண்டனர். ஜப்பானியர் பீகிங் நகரைச் சுற்றியுள்ள பகுதிகளைக் கைப்பற்றி அந்நகரை சுற்றி வளைத்தனர். போரின் காரணமாக பீகிங் நகரம் பாழ்பட்டு அந்நகரத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டிடங்களும் கலைச் சின்னங்களும் அழிந்துவிடும் என்றஞ்சிய சீன அரசு அந்நகரைக்க காலிசெய்தது. 'பீகிங் ஜப்பான் வசமானது.

**சீனர்களின் எதிர்ப்பு :**

திர்ப்பு : 33 நவீன சக்திவாய்ந்த படைக்கலன்களைக் கொண்ட நன்கு பயிற்சி பெற்ற ஜப்பானிய படைகள் சீனர்களின் எதிர்ப்பினை எளிதில் முறியடித்து மகத்தான வெற்றிகளைப் பெற்றன. அதன் பின் சீனர்கள் நேரடியாக எதிர்த்துப் போரிடுவதைக் கைவிட்டு மறைந்திருந்து தாக்கும் கொரிலாப் போர் முறையைக் கடைப்பிடித்தனர். ஜப்பானியர்கள் செய்தி மற்றும் போக்குவரவு தொடர்பு வழித்தடங்களை அழித்தனர். சில இடங்களில் பொசுக்கும் கொள்கையைக்கூட கடைப்பிடித்தனர். எனவே சீன ஆக்கிரமிப்பின் மூலம் ஜப்பானியா எதிர்பார்த்த பொருளியல் ஆதாயங்கள் அவர்களுக்கு கிடைக்கவில்லை. உண்மையில் சீனர்களின் இத்தகைய எதிர்ப்பினை ஜப்பானியர் எதிர்பார்க்கவில்லை. அதன் பின் அவர்கள் முன்னேற்றம் தடைபட்டது.

**பொம்மை அரசுகள் :**

சீனாவின் கரையோர மாநிலங்களைக் கைப்பற்றிய ஜப்பான் அவற்றை தன் மேலாதிக்கத்தின் கீழ் சீரமைக்க பல திட்டங்களை வகுத்தது. சீனாவின் தொல்லைகளுக்கு எல்லாம் காரணம் கம்யூனிஸ்டுகள்தாம். அவர்களை ஒழித்துக்கட்டுவதுதான் ஜப்பானின் முதல்பணி என்று அறிவித்தது. இதன் மூலம் ஐக்கிய முன்னணியில் உள்ள கம்யூனிஸ்டுகள் கோமின்டாங்கு களிடையே பிளவு உண்டுபண்ண முயன்றது. கம்யூனிஸ்டுகளை ஒழிக்க சியாங்கிற்கு அனைத்து உதவிகளையும் செய்வதாக ஆசை காட்டியது. மேலும் சீனாவில் சீர்திருத்த அரசை நிறுவப் போவதாகப் பிரச்சாரம் செய்தது. அதற்காக “மக்கள் புதுப்பிப்பு கட்சியை” (The Peoples Renovation Party) நிறுவியது. சீனாவின் சயநல அரசியல்வாதிகளின் ஆதரவை நாடியது. பின் மஞ்சுகோ, உள்மங்கோலிய பகுதிகளில் பொம்மை அரசுகளை நிறுவியது போல் சீனாவிலும் பொம்மை அரசசை நிறுவ திட்டமிட்டது. கடைசியில் சன்யாட்சென் மறைவிற்குப்பின் சியாங்கே ஷேக்குடன் இணைந்து கோமின்டாங் கட்சித் தலைமைப் பொறுப்பை ஏற்ற

இடதுசாரித் தலைவர் வாங்சிங் வெய் என்பாரைத் தங்கள் ஆதரவாளராக மாற்றுவதில் வெற்றி பெற்றனர். சீனாவில் அவர் தலைமையில் அரசு நிறுவி இதுவே சீனாவின் சீர்திருத்த அரசு என்று அறிவித்தனர். மக்களின் ஆதரவைப் பெற இயலாத

அவ்வரசு வெறும் “காதித அளவிலே” செயல்பட்டது.

(**பேர்ல் துறைமுக தாக்குதல் (1941) :**

இதுவரை கிழக்காசியாவில் இப்போர் சீன-ஜப்பானிய நாடுகளிடையே பாட்ட போராகவே நடைபெற்றது. 1939 செப்டம்பர் 1-ல்

**கெய்ரோ மாநாடு (1943) :**

போர் நடைபெற்றுக் கொண்டிருந்த போதே 1943 நவம்பர் 22 26 வரை அமெரிக்க அதிபர் ரூஸ்வெல்ட், பிரிட்டிஷ் பிரதமர் : ஆகியோரை சீன அதிபர் சியாங் கே ஷேக் கெய்ரோ நகரில் சந் பேசினார். கிழக்காசிய போர்த்திட்டங்களை நேசநாட்டுத் தலை இம்மாநாட்டில் வகுத்தனர். ஜப்பான் நிபந்தனையற்ற சரணா அடையும்வரை போர் தொடரும் என அறிவித்தனர். மேலும் 1894-லிரு ஜப்பான் ஆக்கிரமித்த பகுதிகள் அனைத்தும் மீண்டும் மீட்கப்பட்டு உரி நாடுகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் கொரியா சுதந்திர நாடாக உருவாக்கப்படவேண்டும் எனவும் முடிவு செய்தனர்.

1943 டிசம்பரில் ரூஸ்வெல்ட், சர்ச்சில் ஆகியோர் ரஷிய சர்வாதிகாரி ஸ்ாடாலிணை டெஹ்ரானில் சந்தித்துப் பேசினர். அம்மாநாட்டில் ஐரோப்பியப் போர் முடிந்து ஆறு மாதங்களுக்குப் பின் ஜப்பான் மீது போர் தொடுப்பதாக ரஷியா ரகசிய வாக்குறுதி அளித்தது.

**(ஜப்பான் சரணாகதி :**

1945 மே திங்களில் ஐரோப்பியப் போர் முடிவுற்றதும் ஜப்பானின் நாட்கள் எண்ணப்பட்டுவிட்டன. அவ்வாண்டு ஜூலையில் பாஸ்டாமில் கூடிய நேச நாட்டுத் தலைவர்கள் நிபந்தனையற்ற சரணடையுமாறு இறுதி எச்சரிக்கைவிடுத்தனர். ஜப்பான் அதனைப் பொருட்படுத்தாததால் போரை விரைவில் முடிக்கும் நோக்குடன் 1945 ஆகஸ்ட் 6 ல் ஹிரோஷிமா நகர்மீது அணுகுண்டு வீசப்பட்டது. அதற்கு இரு நாட்களுக்குப்பின் ரஷியா ஜப்பான் மீது போர்ப்பிரகடனம் செய்தது. 9-ம் நாள் நாகசாகி மீது அணுகுண்டினை வீசியது. எனவே ஆகஸ்ட் 13-ல் ஜப்பானியப் பேரரசர் நிபந்தனையற்ற சரணடைந்திருப்பதாக அறிவித்தார். 1945 செப்டம்பர் 2-ல் மிசௌரி என்ற போர்க் கப்பலில் சரணாகதி ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த இரண்டாம் சீன-ஜப்பானியப் போரில் சீனா வெற்றி பெற்றதென்றால் அதற்கு முக்கியக் காரணம் நேச நாடுகள் தாம் குறிப்பாக அமெரிக்கப் படைவலிமைதான் காரணமாகும். இந்தப் போர் இறுதிக் கட்டத்தில் அமெரிக்காவிற்கும், ஜப்பானுக்கும் இடையிலான பலப்பரீட்சையாகத்தான் இருந்தது.)

**விளைவுகள் :**

ப) 1911-ல் சீனா மஞ்சு மரபை வீழ்த்தி ஒரு குடியரசை நிலை நாட்டினாலும் அது முழுமையான சுதந்திர நாடாக இருக்கவில்லை. சீனா

271 2 தொடர்ந்து வெளியார் செல்வாக்கிற்கும், தலையீடுகளுக்கும், அதிகாரங்களுக்கும் உட்பட்டிருந்தது. இரண்டாம் உலகப்போர் சீனாவை வெளியார் கட்டுப்பாடுகளிலிருந்து முழுமையான விடுதலை பெற்ற முழு இறைமையுள்ள நாடாக மாற்றியது.

ii) தூரக்கிழக்கில் ஜப்பான் அடியோடு வீழ்ச்சியுற்றது. அதன் படை மற்றும் பொருளியல் வலிமைகள் முற்றிலும் நாசமாயின. எனவே இப்போது சீனா கிழக்காசியாவில் வல்லரசாகத் திகழ்ந்தது. புதிதாக தொடங்கப்பட்ட பன்னாட்டு நிறுவனமான ஐக்கிய நாடுகள் சபையில் வல்லரசு அந்தஸ்து வழங்கப்பட்டு பாதுகாப்பு குழுவில் நிரந்தர உறுப்பினர் பதவியும், ரத்து அதிகாரமும் கொண்டிருந்தது. கார் iii) வல்லரசு அந்தஸ்து வழங்கப்பட்டாலும் சீனா இன்னமும் அதற்கு தகுதியுடையதாகவில்லை. எட்டாண்டு போர் அதன் பொருளாதார வளங்களை நாசம் செய்துவிட்டது. பற்றாக்குறை வரவு செலவு திட்டம் காரணமாக பணவீக்கம் ஏற்பட்டது. அது நடுத்தர மக்களை கடுமையாகப் பாதித்தது. மேலும் கோமின்டாங் கட்சி பணமுதலைகள் கட்சியாக மாறிவிட்டதால் சாதாரண குடிமக்கள் நலன்கள் பாதுகாக்கப்படவில்லை. இது கோமின்டாங் கட்சியின் செல்வாக்கைப் பாதித்தது.

iv) பொது எதிரியான ஜப்பான் மறைந்துவிட்டதால் கோமின்டாங் கம்யூனிஸ்ட் கட்சிகளிடை புகைந்து கொண்டிருந்த பகைமை தீ உள்நாட்டுப் போராக கொழுந்துவிட்டெரியத் தொடங்கியது. வட சீனாவில் ஜப்பான் ஆக்கிரமித்த பகுதிகளை மீட்பதில் கம்யூனிஸ்டுகள் தீவிரமாய் இருந்தனர். போருக்குப்பின் கம்யூனிசத்தின் தாயகமான ரஷியா ஐரோப்பாவிலேயே வலிமை பெற்ற நாடாகத் திகழ்ந்ததால் சீனக் கம்யூனிஸ்டுகள் புதிய உற்சாகத்துடன் ஆதிக்கப் போட்டியில் ஈடுபட்டனர். அது கம்யூனிஸ்டுகள்

வெற்றியில் முடிவுற்றது.

பாக

வினாக்கள் :

1. இரண்டாம் சீன-ஜப்பானியப் போரின் பல்வேறு

கட்டங்களை விவரி.

(அல்லது) 2. இரண்டாம் உலகப்போரில் சீனாவின் பங்கினை விவரி.

**ஜப்பானின் பொருளியல் வளர்ச்சி** :

இரண்டாம் உலகப் போருக்குப்பின் ஜப்பானின் பொருளாதார வளர்ச்சியை "ஜப்பானின் அற்புதம்" (Japanese Miracle) என்று கூறுவர். தன்னை எரித்த சாம்பலிலிருந்தே உயிர் பெற்றெழும் "பீனிக்ஸ்" என்ற பறவை போல் அணுகுண்டு சாம்பலிலிருந்து ஜப்பான் புத்துயிர் பெற்றெழுந்தது உண்மையிலேயே ஒரு விந்தை நிகழ்ச்சிதான்.

இரண்டாம் உலகப்போரின் இறுதியில் ஜப்பான் நிலை மிகவும் பரிதாபமாக இருந்தது, போரினால் ஏற்பட்ட அழிவு அதன் பொருளாதாரத்தை நிலைகுலையச் செய்துவிட்டது. அமெரிக்க பொருளியல் வல்லுநர் ஜோசப் டாட்ஜ் என்பார் குறிப்பிட்டது போல், ஜப்பான் "மிகச் சிறந்த நாடு மிகப்பெரிய மக்கள் தொகை, மிகக்குறைந்த இயற்கை வளம்" இத்தகைய நிலையில் உள்ள நாடு எவ்வாறு பொருளாதார முன்னேற்றம் பெற முடியும் என்று ஐயுற்றனர். ஜப்பானின் பேரரசுப் பரப்பில் 311514 ச.கி.மி. பூமி பறிபோனது. தெற்கு சகாலின் தீவு, குறைல் திவுகள், கொரியா, தைவான் போன்ற காலனிகள் பறிபோயின, அங்கு குடியிருந்த

60 லட்சத்திற்கும் மேற்பட்ட ஜப்பானியர் நாடு திரும்பி ஏற்கனவே மக்கள் தொகைப் பெருக்கத்தாலும் வேலையில்லாத் திண்டாட்டத்தினாலும் திகைத்துக் கொண்டிருந்த ஜப்பானை திணற அடித்தது. போர் இழப்பீடுகள் என்ற வகையில் 50 மில்லியன் டாலர் மதிப்பிற்கு அதிகமான ஆலைத்தொழில் தளவாடங்கள் அபகரிக்கப்பட்டது. எனவே தரைமட்டமாக்கப்பட்ட ஜப்பான இனி தலைதூக்கவே இயலாது என்றே எதிர்பார்த்தனர். ஆனால் 20 ஆண்டு மிகவும் குறைவு. எனவே அறிவியல் ரீதியான அதிநவீன வேளாண்மை முறைகள் கடைப்பிடிக்கப்பட்டு உணவு உற்பத்தியும் அதிகரிக்கப்பட்டது இவ்வாறு ஜப்பானின் பொருளாதாரம் உறுதியான அடிப்படையில் போடப்பட்டதால் 1990களின் பிற்பகுதியில் தென்கிழக்கு மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளில் பரவிய பொருளாதார மந்தமும் நெருக்கடியும் ஜப்பானை அதிகமாகப் பாதிக்கவில்லை .) **ஜப்பானின் வெளியுறவுக் கொள் கை** :

1951 செப்டம்பர் 8ல் சான்பிரான்சிஸ்கோ அமெரிக்கா உட்பட 49 நாடுகள் அமைதி ஒப்பந்தம் செய்து கொண்டன. அதனைத் தொடர்ந்து ஜப்பான் மீதான நேசநாடுகள் ஆக்கிரமிப்பு அகன்றது. ஜப்பான் முழு இறைமை வாய்ந்த அரசாக சுதந்திரமாக இயங்கத் தொடங்கியது. சுற்றிலும் உள்ள ஆசிய நாடுகளுடன் இரண்டாம் உலகப்போர் காலத்தில் ஆக்கிரமிப்பு போரில் ஈடுபட்டதால் அந்நாடுகளுடன் உறவைச் சீர்செய்து கொள்ள சிறிது காலம் பிடித்தது.

**அமெரிக்காவுடன் உறவு** :

சான்பிரரன்சிஸ்கோ அமைதி ஒப்பந்தத்திற்குப் பின் ஜப்பானில் உள்ள அமெரிக்க இராணுவமும் அமெரிக்க அதிகாரிகளும் வெளியேறினர். அதன் மூலம் ஜப்பான் சுதந்திரமான வெளியுறவுக் கொள்கையைக் கடைபிடிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. எனினும் அமெரிக்க சார்பான கொள்கையே கடைப்பிடிக்கப்பட்டது. ஜான் பிரான்சிஸ்கோ அமைதி ஒப்பந்தத்தைத் தொடர்ந்து ஜப்பான் அமெரிக்காவுடன் பத்தாண்டுகால பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொண்டது. அதன்படி,

i) ஜப்பான் பாதுகாப்பிற்கு அமெரிக்கா உறுதியளித்தது. ii) தொடர்ந்து அமெரிக்கா ஜப்பானில் உள்ள தன்படைத் தளங்களை

வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டது. iii) ஒகினாவா தீவிர அமெரிக்கர்கள் தங்குவதற்கு அனுமதி

அளிக்கப்பட்டது.

இந்த ஒப்பந்தப்படி 1950-53ல் நிகழ்ந்த கொரியாப் போரின் போது அமெரிக்கா ஜப்பானில் உள்ள தன் இராணுவத் தளங்களைப் பயன்படுத்திக் கொண்டது. 1954-ல் பரஸ்பர பாதுகாப்பு உதவி ஒப்பந்தம் ஒன்றையும் செய்து கொண்டது. எனினும் அமெரிக்கப்படைத் தளங்கள் ஜப்பானில் தொடர்ந்து ப்பதற்கு ஜப்பானில் எதிர்ப்பு ஏற்பட்டது. கெடுபிடிப்போர் உச்சநிலையில் ந்த அந்த காலகட்டத்தில் ஜப்பானில் உள்ள தங்கள் தளங்களை மெரிக்கா கம்யூனிஸ்ட் சீனாவிற்கோ - ரஷியாவிற்கு எதிராகவோ என்படுத்தினால் அந்நாடுகள் பதிலுக்கு தாக்கலாம் என ஜப்பானியர் பஞ்சினர். எனினும் 1960-ல் அந்த ஒப்பந்தம் சில மாறுதல்களுடன் மேலும்

காண்டு காலத்திற்குப் புதுப்பிக்கப்பட்டது. அமெரிக்காவில் அதிபர் கென்னடி பதவியேற்றபின் ஜப்பானுடன் நல்லுறவு ஏற்படுத்த முயன்றார். அரசியல் பொருளியல் துறைகளில் கூட்டுறவு மற்றும் ஒத்துழைப்புப் பற்றி இருநாடுகளும் அடிக்கடி கலந்து பேசி முடிவு எடுக்கவேண்டும் என்று அவர் அறிவித்தார். தென்கிழக்கு ஆசியாவில் வளர்ந்து வரும் கம்யூனிச செல்வாக்கை மட்டுப்படுத்த ஜப்பானுடன் நல்லுறவு கொள்ளவேண்டும் என்று அமெரிக்கா கருதியது.

தூரக்கிழக்கில் கம்யூனிச எதிர்ப்பு அணியின் எஃகு கோட்டையாக ஜப்பான் விளங்க வேண்டும் என அமெரிக்கா எதிர்பார்த்தது. ஆனால் வெளியுறவுக் கொள்கையில் அமெரிக்க சார்பு போக்கினை கைவிடவேண்டும் என்றும் பெரும்பாலான ஜப்பானியர்கள் விரும்புகின்றனர்.

**ரஷியாவுடனான உறவு :**

ரஷியா சான்பிரான்சிஸ்கோ அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை. ஜப்பான் அமெரிக்காவின் படைத்தளமாகவும் கம்யூனிச எதிர்ப்பு அரணாகவும் விளங்குவதாக ரஷியர் கருதியதால் இரு நாடுகளுக்கிடையில் நல்லுறவு நிலவவில்லை . அதனால் இரு நாடுகளிடையில் இரண்டாம் உலகப்போர் அதிகாரபூர்வமாக முடிவிற்கு வரவில்லை . எனினும் 1955ல் ரஷியா-ஜப்பான் நாடுகளிடையே அமைதி ஒப்பந்தம் கையெழுத்தாவது சம்மந்தமாக லண்டனில் பேச்சு வார்த்தை தொடங்கியது. பேச்சுவார்த்தை நடைபெறும்போது ஐ.நா.வில் ஜப்பான் உறுப்பினராகச் சேரும் பிரச்சனை வந்தது. அதனை ரஷியா தனது ரத்து அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜப்பான் ஐ.நா. சபை உறுப்பினராவதை தடுத்தது. அதனால் பேச்சுவார்த்தை முறிந்தது. ஆனாலும் மறுஆண்டு பேச்சுவார்த்தை தொடங்கியது. அதன் விளைவாக இரு நாடுகளிடையே தூதரக உறவு புதுப்பிக்கப்பட்டது. ஜப்பானும் ஐ.நா. சபையில் உறுப்பினரானது.

எனினும் இருநாடுகளிடையே உறவு இன்னமும் சீராகவில்லை . யால்டா உடன்பாட்டின்படி சகாவின் குரைல் தீவுகளை ரஷியா எடுத்துக்கொண்டது. அத்தீவுகள் மீதான தனது உரிமையை ஜப்பான் சான்பிரான்சிஸ்கோ உடன்பாட்டின்படி கைவிட்டது. எனினும்

அவைகளையொட்டி ஜப்பானுக்கு மிக அருகில் உள்ள எட்டொரோ குணாஷிரி என்ற இரு தீவுகளை ஜப்பான் கோரிய போது ரஷியா மறுத்துவிட்டது. ஆனால் இரு நாடுகளுக்கிடையில் பல வாணிப் ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. சோவியத்-ஜப்பானிய பொருளியல் ஒத்துழைப்பு குழு ஒன்று நிறுவப்பட்டது. அதன் விளைவாக 1974ல் ரஷியாவுடனான வாணிபம் 58 சதவீதம் அதிகரித்து 82500 மில்லியனை எட்டியது. அது மட்டுமன்றி சைபீரியாவிலுள்ள இயற்கைச் செல்வங்களைக் கண்டறிந்து பயன்படுத்துவதில் இருநாடுகளும் இணைந்து செயல்பட்டன. .

**சீனாவுடன் உறவு :**

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தேசீய சீனா ஜப்பானிய ஆதிக்க வெறியர்களின் கையில் சிக்கி சின்னாபின்னமானது. ஆனால் 1945-ல் ஜப்பான் இரண்டாம் உலகப் போரில் படுதோல்வியடைந்தபின் நிலைமை தலைகீழாக மாறியது. கெய்ரோ அறிக்கையின்படி ஜப்பான் சீனாவில் ஆக்கிரமித்த அனைத்துப் பகுதிகளிலிருந்தும் வெளியேறியது. 1949-ல் சீனாவில் கம்யூனிஸ்ட் ஆட்சி ஏற்பட்டபின் சீன-ஜப்பானிய உறவில் புதிய சிக்கல்கள் தோன்றின. ஜப்பான், அமெரிக்காவின் ராணுவ தளமாக, கம்யூனிச எதிர்ப்பு அரணாக ஆக்கப்பட்டு விட்டதால் இரு நாடுகள் இடையிலான உறவு சீர்கெட்டது. 1971-ல் அமெரிக்க அதிபர் நிக்சன், பீகிங் விஜயம் செய்த பின் சீன-ஜப்பான் நாடுகளிடையில் நல்லுறவு ஏற்படும் சூழ்நிலை தோன்றியது. 1972-ல் ஜப்பானிய பிரதமர் தனாக்கா, பீகிங்கிற்கு விஜயம் செய்தார். முந்திய காலத்தில் ஜப்பான் சீனாவில் இழைத்த அநீதிகளுக்கு மன்னிப்பு வழங்குமாறு கேட்டார். அதன் பயனாக இரு நாடுகளிடையே நிலவிய போர்ச் சூழ்நிலை அகன்றுவிட்டதாக கூட்டறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. அதன்பின் இரு நாடுகளிடையே வாணிபத் தொடர்பு ஏற்பட்டது.

**ஆசிய நாடுகளுடன் உறவு :**

ஆசிய நாடுகளுடன் "நல் அண்டை வீட்டுக்காரர் உறவு" கொள்ள விரும்புவதாக ஜப்பான் 1959-ல் அறிவித்தது. 1955-ல் பாண்டுங்கில் கூடிய ஆசிய-ஆப்பிரிக்க மாநாட்டில் ஜப்பான் கலந்து கொண்ட போது விடுதலை பெற்ற ஆசிய நாடுகளுடன் கலந்துரையாடும் வாய்ப்பினைப் பெற்றது. ஏற்கனவே ஆசிய நாடுகளுடன் அமைதி ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தது. 1952-ல் இந்தியாவுடனும், 1954-ல் பர்மாவுடனும், 1956-ல் பிலிப்பைன்சுடனும்,

42 - 257 1958-ல் இந்தோனேஷியாவுடனும் அமைதி ஒப்பந்தம் செய்து கொண்டது. 1965-ல் தென்கொரியாவுடன் அமைதி ஒப்பந்தம் செய்து கொண்டது. அங்கு முன்னர் இழைத்த அநீதிகளுக்குப் பரிகாரமாக பொருளியல் உதவி அளிக்கவும் முன்வந்தது. ஆசிய நாடுகளின் மூல வளங்கள் ஜப்பானைக் கவர்ந்த போது, ஜப்பானின் தொழில் வளர்ச்சி ஆசிய நாடுகளைக் கவர்ந்தது. எனவே ஆசிய நாடுகளுடன் பொருளியல் உறவும் வாணிபத் தொடர்பும் கொள்ள ஜப்பான் விரும்பியது.) திறனாய்வு :

ஜப்பானின் அயலுறவுக் கொள்கையில் அமெரிக்கச் சார்பு தெளிவாகக் காணப்பட்டாலும் அதன் பொருளியல் வளர்ச்சி பிற உலகநாடுகளுடன் நல்லுறவு கொள்ளத் தூண்டுகிறது; அணுகுண்டின் அழிவு கொடுமையை அனுபவித்த நாடு. ஆதலால் அந்த நாசகார குண்டுகளை ஒழிக்க வேண்டும் என்பதில் முன்னிலையில் இருக்கிறது. அதனால் முழுமையான அணு ஆயுத சோதனை தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதோடு, அணு ஆயுத சோதனையில் ஈடுபட்ட இந்தியாவுடனான பொருளாதார தொடர்புகளை துண்டிக்க முடிவு செய்துள்ளது. ரஷியாவுடன் இரு தீவுகள் சம்பந்தமாக கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் அதனை பேச்சுவார்த்தை மூலமே தீர்த்துக்கொள்ள விரும்புகிறது. சுருங்கக்கூறின் இரண்டாம் உலகப்போருக்குப் பின் ஜப்பான் தன் ஆதிக்க விஸ்தரிப்புக் கொள்கையை முற்றிலும் கைவிட்டு அமைதி வழிகளை கடைப்பிடிப்பதில் ஆர்வம் கொண்டுள்ளது. தனது மொத்த வருவாயில் 17 சதவீதத்தைத் தான் பாதுகாப்பிற்கு செலவு செய்வதால் தொழில் வளர்ச்சியில் முன்னனி நாடாக விளங்குகிறது.

வினாக்கள் :

1. நேசநாடுகள் வெளியேறியபின் ஜப்பானின் வரலாற்றைத் தொகுத்து வரைக.

2. ஜப்பானின் அயலுறவுக் கொள்கையை மதிப்பீடு செய்க.

3. இரண்டாம் உலக போருக்குப்பின் ஜப்பானின் பொருளாதார வளர்ச்சியை விவரி?

-